# இருக்கிறம்

மாதம் இருமுறை

காத்திருப்பு 2 - இருக்கை 7
ஒரு பொல்லாப்புமில்லை
20-08-2008



## ஆவணித் திருவிழா நடக்காத அம்மாவுக்கு ஓர் கடிதம்

## தமிழ் சினிமா 75 வருட நிறைவு

## பாவனை செய்யும் பாவனா

ISSN 1800-3699
9 771800 369000

50/-



வினைத்திறன் மிக்க சேவை நிர்வாகம் மற்றும் பிரஜைகளின்
ஆலோசனை பெறல் என்பவற்றினூடாக பொருளாதார
வளர்ச்சியினை மேம்படுத்துவதற்காக பிரதேச சபை,
நகரசபை, மாநகரசபை என்பவற்றுடன் இணைந்து
செயற்படும் ஒரு உயரிய அமைப்பே
"இலங்கை ஆசிய நிலையம்"

உள்ளூராட்சி சபைகளின் வெளிப்படையான தன்மையை
மேம்படுத்தி, சிறந்த பொருளாதார வளர்ச்சியை பொது மக்கள்
அடைவதற்கு அர்ப்பணிப்புடன் பணியாற்றுவதே
ஆசிய நிலையத்தின் முக்கிய நோக்கமாகும்.

THE ASIA FOUNDATION

நடிகைகளும்

86 நிகழ்ச்சிகளும்









பாவனை செய்யும் பாவனா

04

இசைக்குயில் சுபாஷினியின்

90









ஜீன்ஸிற்கு ஏற்ற ரொப்ஸ்

08

# ஆவணியில் எம் பூமணிக்கு இருக்கிறம்

வணக்கம் தாயே!

வாசகர்களுக்கு அல்ல, இன்றைய வணக்கம் உனக்குத்தான் மடுமாதாவே! வார்த்தைகளில்தானே, உன்னை சோதனைகள் இன்றி இங்கு எங்களால் வழி பட முடிகிறது.

வழிபாடுகளுக்கும் வணக்கங்களுக்கும் ஆசி வழங்கிய நீயே இன்று அரசியலாகிப் போனாய்.


இங்கு எல்லாமே அரசியலாகிறது, அரசியல் மட்டும் தான் எதுவும் ஆகாமல் அப்படியே குட்டையாய்க் கிடக்கிறது. அன்றைய அரசியலும் ஆயிரம் புனிதங்களும் மட்டையாய்க் கிடந்து உழலும் குட்டை அது. அந்தக் குட்டைக்குள் உன்னையும் கூட்டிப் போகிற பாவிகளை நாம் என்ன சொல்ல. நானூறு ஆண்டு கால உன் அருளாட்சி, அரசாட்சிக்குள் அடங்கிப் போகிற வேதனைகளோடு தான் எழுத வேண்டியிருக்கிறது.

மன்னிக்கப்பட வேண்டிய பாவிகளை மன்னித்தும், ஆசீர்வதிக்கப்பட வேண்டிய ஆன்மாக்களை ஆசிர்வதித்தும் பேராட்சி செய்த பெருமாட்டியே! இன்றோ பாவத்தின் சம்பளத்தைக் கூட (சிலருக்கு கொஞ்சம் அவசரமாக) தர முடியாத தவிப்பில் இருக்கிறாய். உலகைப் படைக்கவல்ல உன்னைப் போலவே படைக்க வல்லவர்களையும் உடைத்தெறியும் கல்லாநிதிகளுக்கே, யார் மீதும் பயமில்லையென்றாகிப் போச்சு. தனக்கு யாரும் தண்டனை தர முடியாதென்று சொல்கிற சண்டியர்களை என்ன செய்வதாக உத்தேசம் மாதாவே! அடிக்கடியும், அடிக்க அடிக்கவும் நாம் வழக்கம் போலவே வீதி வீதியாகக் கூடிக் கத்துவதைவிட, என்ன செய்யலாம் என்று ஏதாவது சொல்ல மாட்டாயா? நீ சொல்ல மாட்டாய்! மௌனம் தானே உன் மொழி.

உனக்காகவும் உன் சுதனுக்காகவும் பேச வந்த அப்போஸ்தலர்களின் சொற்களைக் கூட புரிந்து கொள்ளாத இந்த உலகம் உன் மௌனத்தையா புரிந்து கொள்ளும். (பேச்சு) வார்த்தைகளையும், உன் மௌனத்தையும் புரிந்து கொள்ளாத இவர்கள், காடு காடாய் அழும் ஏழைகளின் கண்ணீரை என்றுமே புரிந்து கொள்ளப் போவதுமில்லை.

புரியாத அந்தப் புரிதல்கள் புரிந்து எல்லாம் சரியாகிற நாளொன்றில்தான் 'இருக்கிற' நாம் வாழ முடியும். வாழ்வே இல்லாத போது விழா எதற்கு என்று நீயும் தவிர்த்து விட்டதாகக் கேள்வி. எமக்கு மட்டுமல்ல உனக்கும் கூட இருப்பென்று வருகிற போது 'தவிர்ப்புகள்' தான் துணையாகிறதோ!!

ஆண்டவரே!!







# குங் - பூ - மேர்வின்



# பாவனா



பூவும் மஞ்சளும்
மத்தாப்புச்சிரிப்பும் என
பூரித்துப்போயிருக்கிறார்
பாவனைகள் பல செய்யும்
பாவனா.



குடும்பப்பாங்கான வேடங்களுக்கு சினேகாவுக்கு பிறகு யார் என்றால் பாவனா என்றுதான் சொல்கிறார்கள் கோடம்பக்கத்தார். சாறிக்கும், தாவணிக்கும், ஏற்ற அம்மணி என்றால் அது இந்த பெண்மணிதான்.

# செய்யும் பாவனா

**வெள்ளரிச் சிரிப்பு,** மான்விழி கண்கள், ஒரேஞ்சு பழம் போன்ற முகம், அகன்ற மூக்கு என சிந்திக்க வைக்கும் பாவனாவின் இயற்பெயர் கார்த்திகா.

பாலச்சந்திரன் மேனன் புஸ்பா தம்பதியினரின் இந்தச் செல்லம் மலையாளப் பூர்வீகம். தமிழ், தெலுங்கு, மலையாளம் எனப் பல படங்களில் நடித்து சில விருதுகளும் பெற்றிருக்கிறார்.



அரங்கில் வெய்யில் படத்தின் மூலமே ரசிகர்களின் மனதில் இவரால் இடம் பிடிக்க முடிந்தது.

2006 ஆம் ஆண்டு சிறந்த நடிகைக்கான பிலிம் பேர் விருதும் மாநில அளவில் சிறந்த நடிகைக்கான விருதும் யுயாலா ஏசியன் நெற் விருதும் கிடைத்த இந்த மலையாள மானுக்கு 2004 ஆம் ஆண்டு சிறந்த முக அமைப்பைக் கொண்ட நடிகைக்கான விருதும் கிடைத்தது.

6-6-1986 ஆம் ஆண்டு பிறந்த இவருக்கு இப்பொழுதுதான் 22 வயதாகின்றது. சிநேகாவின் இடத்தை இவர் நிரப்புவார் என்கிறார்கள். வயதும் இருக்கு அழகும் இருக்கு திறமையும் இருக்கு, பொறுத்திருந்து பார்ப்பம்.

மம்முட்டி, மோகன்லால் என மலையாள முன்னணி நடிகர்களுடன் நடித்த பெருமையும் உண்டு இம்மணிக்கு.

கூடல் திரைப்படத்தின் மூலம் தமிழ் திரைப்பட அரங்கில் காலடி எடுத்து வைத்து மெதுவாக முன்னேறி கிழக்கு கடற்கரைச்சாலை, சித்திரம்பேசுதடி, தீபாவளி, வெயில் என நடித்து தமிழ் உள்ளங்களை கொள்ளை கொண்டவர் இந்த பதுமை பாவனா.



இதில் வெயில், சித்திரம் பேசுதடி ஆகிய திரைப்படங்கள் சக்கை போடு போட்டன.

இவரின் முதல் மலையாளப் படமான நம்மல் 2002 வெளியாகியது. ஆனால் தமிழ்த்திரைப்பட



இப்படியே இருந்தால்
தாக்குப்பிடிக்கலாம் ஆடை
குறைந்தால் அரங்கிலிருந்து
அகற்றப்பட்டுவிடுவீர்
அம்மணியே எங்கள்
கண்மணியே.

ஜீன்



# ஜீன்ஸிற்கு ஏற்ற ரொப்ஸ்

**சாறியும், தாவணியும் தான் பெண்களின் உடை என்று இருந்த காலத்தில் வாகனம் ஓட்டுபவர்களுக்கும், வேலைக்குச் செல்பவர்களுக்கும் வரப்பிரசாதமாக வந்தது தான் சுடிதார்.**

சுடிதாருக்கு இன்றல்ல, நேற்றல்ல, எப்போதுமே பெறுமதி அதிகம் தான். தாவணியை முற்றிலுமாக மறந்து சுடிதாருக்கு வந்த பெண்கள், படிப்படியாக, ஜீன்ஸ், ரிசேர்ட்டிற்கு மாறினார்கள்.

எங்கு பார்த்தாலும் சுடிதார் கடைகளும் ஜீன்ஸ் கடைகளும் என காட்சி அளித்தன. அங்கு தான் பெண்களின் கூட்டமும் இருந்தது.

பாவடை, தாவணி என்பது ஏதோ முக்கிய நிகழ்ச்சியில் மட்டும் ஒரு சிலரால் விரும்பி அணியப்படும் ஆடையாக மாறியது. பாடசாலை சீருடை வடிவத்திலாவது, தாவணிகளுக்கு உயிர் கொடுத்து வந்த பல பாடசாலைகளும், தாவணியின் கழுத்துக்களை சுடிதார் சோல்களால் இறுக்கி கொன்றன.

தற்போது பாவாடை, தாவணி என்ற ஒரு ஆடையே மிகவும் குறைந்து முற்றிலுமாக அழிந்து விட்டது என்று கூட சொல்லலாம்.

சரி தற்போது ஜீன்ஸ் கொடி கட்டி பறக்கும் பல இடங்களில்





அதற்கு பொருத்தமாக போடப்படும் மேல் பிளவுஸ், அதாவது ரொப்ஸ்கள் தான் இன்று நாம் பேசப்போகும் விடயம்.

பல்வேறு வகைகளில் இப்பொழுது ரொப்ஸ்கள் கிடைக்கின்றன. முழுவதும் வேலைப்பாடு செய்யப்பட்டதும், கை, மற்றும் கழுத்துப்பகுதியில் மட்டும் வேலைப்பாடு செய்யப்பட்டதும், பாசி மணிகள், முத்துக்கள் வைத்து தைக்கப்பட்ட ரொப்ஸ் என இது நீண்டு கொண்டே செல்லும்

பொதுவாக மெலிவாக இருக்கும் பெண்கள் தங்களது உடல் அளவிற்கு ஏற்ற சிறிய ரொப்ஸ்கள் அல்லது சேட்டுகளை தேர்ந்து எடுக்கின்றனர்.

பெண்களுக்கு என தற்போது பல பிளவுஸ்கள் வருகின்றன. முழுக்கை, மற்றும் பொக்கெட்டுக்களுடன் என மிகவும் அழகானவை. மென்மையான நிறங்களில் பிளவுஸ், ரொப்ஸ்

களை எடுத்து கறுப்பு, கடும் நீலம் போன்ற ஜீன்ஸ்களுக்கு அணிய லாம்.

அழகான தோற்றம் கொண்ட வர்கள் இது போன்ற ரொப்ஸ்களை வாங்கும் போது அதற்கேற்ற வலை ப்பின்னல் போன்ற ஷோல்களையும் வாங்கி அணிந்து கொள்வதும் ஒரு நாகரீகம் ஆகிவிட்டது.

கை நீளம், கை கட்டை, அல்லது கையே இல்லாத ரொப்ஸ்களில் உங்கள் தோற்றத்துக்கு ஏற்றவாறு தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள்.



எதுவாக இருந்தா லும் ஒன்றுக்கு இரண்டு முறை பார்த்து வாங்கி உங்களுக்கு ஏற்ற உடை யை தேர்ந்தெடுங்கள்.

உடைகள் உங்க ளது உடல் அளவிற் கும், உடல் நிறத் திற்கும், ஏற் றதாகவும், பார் ப்பவர்களை



முகம் சுளிக்க வைக்காமலும் இருப்பது தான் உண்மையான அழகு.

உடல் அதிக பருமன் கொண்டவர்கள், நீண்ட ரொப்ஸ்களையும் அத ற்கு மேல் ஒரு ஷோலை யும் போட்டு கொள் வது உங்களை அழகாக காட்டும்.

மெலிவான உடல் அமைப்பைக் கொண்டவர்கள், அதிக வேலைப்பாடு கொண்ட ரொப்ஸ்களை கூடுதலாக அணிய லாம்.உங்களை அழகாகக் காட் டும்.

# மயூராபதி அம்மன்



ஆலய பஞ்சரத பவனியின் போது எமது புகைப்பட கருவிக்குள் அகப்பட்ட சில படங்கள்.



பூலான்தேவி 15

**மாயாதீன் புட்டிலாலுடனும் அவனுடைய ஊர்க்காரர்கள் சிலருடனும் வாசலில் நின்றான். ‘பூலானை புட்டிலாலுடன் அனுப்பு’ என்று தேவிதீனை மாயாதீன் வற்புறுத்தினான்.**

தன்னுடன் வந்தவர்கள் பொலிஸ் காரர்கள் என்று புட்டிலால் சொன்னான். தனது மனைவியைக் கடத்திக் கொண்டு வந்து விட்டதாக தான் பஞ்சாயத்தில் புகார் செய்து பொலிஸைக் கூட்டி வந்திருப்பதாக புட்டிலால் தெரிவித்தான். பஞ்சாயத்தினர் வந்தனர். பூலானது ஊரவரும் புதினம் பார்க்கத் திரண்டனர்.

வந்தவர்களைப் பார்த்தால் பொலிஸ் காரர்களாகத் தெரியவில்லை. பொலிஸ் சீருடையோ அவர்கள் அணியும் நட்சத்திரச் சின்னங்களோ அவர்களிடம் இல்லை. ஆனால் பூலானையும் அவளது தங்கைகளையும் கூட்டிக் கொண்டு போய் விடுவதாக மிரட்டினர்.

பூலானுடைய அம்மா ‘இனி அவள் எப்போதும் உங்களுடன் வர மாட்டாள். வேண்டுமானால் மணவிலக்கு செய்து கொள்கிறோம்' என்று கோபமாகக் கூறினாள். புட்டிலால் தனது நகைகளைத் திரும்பத் தரும்படி கேட்டான்.

# வேப்பமரத்தின் கீழ் ஒரு துர்க்கை

அம்மா அவன் பூலானுக்குக் கொடுத்த வெள்ளி நகைகள் அனைத்தையும் பஞ்சாயத்தார் முன்னிலையிலும் ஊரார் முன்னிலையிலும் அப்படியே திருப்பிக் கொடுத்தாள். நகைகளைத் திருப்பிக் கொடுத்து சரி என்றார்கள் பஞ்சாயத்தினர். பஞ்சாயத்தினரதும் ஊரவர்களதும் அபிப்பிராயம் பூலானுக்கு சார்பாகவே இருந்தது.

புட்டிலால் கண்கள் கோபத்தால் மின்னித் திரும்பிச் சென்றான். மாயாதீனுக்கு தோல்வி காரணமாக வியர்த்து ஒழுகியது.

ஆனால் அடுத்த நாள் உண்மையான சில பொலிஸ்காரர்களுடன் புட்டிலால் திரும்ப வந்தான்.

அவர்கள் தேவிதீனை 'எந்த தைரியத்தில் இவரது மனைவியைக் கடத்தி வந்தாய்' எனக் கேட்டு மிரட்டினர்.

'ஏய் உனது மகளைக் கூட்டி வா' என அம்மாவை அதட்டினர். அம்மா சமையலறையிலிருந்த பூலானை இழுத்து வந்து பொலிஸ்காரர்கள் முன் நிறுத்தினார்.

பொலிஸ்காரர்களுக்கு குழப்பமாக இருந்தது. அவர்கள் புட்டிலாலிடம் 'இவள்தான் உன் மனைவியா?' என்று கேட்டனர். புட்டிலால் நடுங்க ஆரம்பித்தான்.

பொலிஸ்காரர்களில் அதிகாரி போல இருந்தவர் 'இவள் ஒரு சிறுமி அல்லவா? இவளைத் திருமணம் செய்தது சட்டப்படி குற்றம். இனி ஏதாவது தொந்தரவு கொடுத்தாயானால் கம்பி எண்ண வேண்டியிருக்கும்' என்று புட்டிலாலை அச்சுறுத்திவிட்டுச் சென்றனர்.



இவ்வாறு புட்டிலாலுடைய கொடுமைகளிலிருந்து பூலானுக்கு விடுதலை கிடைத்தது. பூலானுக்கு ஏறத்தாழ அப்போது பதின் மூன்று வயது நடந்து கொண்டிருந்தது.

ஆனால் மாயாதீனுடைய பழிவாங்கல்கள் தொடர்ந்து கொண்டிருந்தன. தனக்கு எதிராக தொடுக்கப்பட்ட வழக்கைத் திரும்பப் பெறுமாறு அவன் பூலானை அடிக்கடி வற்புறுத்தத் தொடங்கினான்.

ஒரு நாள் பொறுமை இழந்த பூலான் அவனுடன் சண்டையிட்டாள். அவளால் அநியாயங்களைப் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. நல்ல உழைப்பாளியான பூலான் தான் வேலை செய்யும் இடங்களிலிருந்து கறாராக கணக்குப் பார்த்து பணம் பெற்றுக் கொள்ளாமல் அங்கிருந்து நகர்வதில்லை. இதனால் அவளுக்கு ஊரில் மெல்ல மெல்ல எதிரிகள் உருவாகிக் கொண்டிருந்தார்கள்.

அந்த வருஷத்தின் வசந்த காலத்தில் ருக்மணியின் ஊரிலிருந்து சிலர் பூலானின் வீட்டுக்கு பெண் பார்க்க வந்தார்கள். அவர்கள் வந்தது பூலானைப் பெண் பார்க்க அல்ல. சோட்டியை அவர்கள் நிச்சயம் செய்தார்கள். சில நாட்களுக்குப் பிறகு பதினான்கு வயதான அழகான ஒரு பையனுக்கும் சோட்டிக்கும் திருமணம் நடந்தது. அவன் எல்லாவிதத்திலும் நல்ல ஒரு மணமகனாக இருந்தான். பூலான் புட்டிலாலுடன் மல்லுக் கட்டியதைப் போன்று சோட்டிக்கு நேராது. அதையிட்டு பூலான் முகவும் மகிழ்ச்சியடைந்தாள்.



ஆயினும் திருமணத்தை நடாத்த அவர்கள் மிகவும் சிரமப்பட்டார்கள். அவர்களிடம் கடைசியாக எஞ்சியிருந்த நகைகள் எல்லாவற்றையும் விற்றார்கள். மேலும் ஊராரிடம் கடன் வாங்கினார்கள். ஆனாலும் களங்கமில்லாதவர்களாவும் தகுந்த சோடிகளாவும் இருந்த அந்த மணமக்கள் பூலானின் குடும்பத்துக்கு மகிழ்ச்சியையும் நிம்மதியையும் கொடுத்தனர்.

சோட்டியின் திருமணம் நடந்த சில நாட்களின் பின்னர் பூலானின் அம்மா மூலாதேவி பூலானுக்கு மறுமணம் செய்து வைக்க எண்ணி ஒவ்வொரு ஊராக மாப்பிள்ளை தேட ஆரம்பித்தாள். ஆனாலும் ஒரு முடவனோ குருடனோ கூட அகப்படவில்லை.

பூலான் அவர்களது கிராமத்திலேயே தொடர்ந்து இருந்தாள். அவளது போர்க்குணம் மேலும் அவளுக்கு எதிரிகளைத் தேடித்தந்தது. அதன் காரணமாக அவளைத் தேடி கொள்ளைக்காரர்கள் வரும் காலமும் நெருங்கிக் கொண்டிருந்தது.

# யார் கையில் யார் வாழ்வு?

பதிப்பகத்தார்.

எமது நாட்டில் தலைவிரித்தாடும் வன்முறை அளவுக்கு மீறியதாலோ என்னவோ சென்ற வருடம் தொடக்கம் பலவிதமான சோதிடர்கள் அரசியல் நிலைமைகளைப் பற்றி ஆருடம் கூறத் தொடங்கி விட்டார்கள். மக்கள் எதிர்நோக்கியிருந்த அவலங்கள் காரணமாக இவை ஆவலோடு கதைக்கப்பட்ட தரவுகளாகின. யுத்தத்திற்கான காலக்கெடு எமது இராணுவத் தளபதியினால் மட்டுமல்ல பல சோதிடர்களினாலும் வைக்கப்பட்டது.

அதே போல சாயி பகவான் 2008 ஆம் ஆண்டை ஒரு இரத்தக்களரி நிறைந்த வருடமாகவும் இந்த வருடம் ஆகஸ்ட் மாதம் முதல் காலம் திசை திரும்பி அடுத்த ஏப்ரல் மாதம் அளவில் சமாதானம் மலரும் எனத் தெரிவித்ததாகவும் ஒரு கதை கேள்விப்பட்டோம். இதன் உண்மை, பொய் எமக்குத் தெரியா விட்டாலும் திடீரென கடந்த வாரங்களில் அரசியல் நிலைமைகள் ஒரு திருப்பத்தை எட்டுவதைப் போலத்தான் எமக்குத் தெரிகிறது. இவற்றில் முதல் முக்கியமான திருப்பம் திறைசேரி செயலாளர் பி.பி. ஜயசுந்தர ஜோன் கீல்ஸ் கம்பனியுடனான தனியார் மயமாக்கல் நடவடிக்கைகளில் ஊழல் முறையில் செயற்பட்டதாக உயர்நீதிமன்றினால் தண்டிக்கப்பட்ட நிகழ்வாகும்.நாம் வாசகர்களுடன் அடிக்கடி எமது நீதித்துறையின் நிலைமை பற்றி அளவளாவி வருகிறோம். ஒரு ஜனநாயக அமைப்புக்கு இன்றியமை யாத கட்டமைப்பு நீதித்துறையாகும். ஜனநாயகம் என்றால் என்ன? சாதி மத இன வேற்றுமைகள் எவையுமின்றி வெவ்வேறு நலன் களை உடையவர்கள் ஒருவருடன் ஒருவர் பொருதி (பேரம் பேசி என்று எடுத்துக் கொள்ளுங்கள்) ஒரு சமரசத்துக்கு வருவதே ஜனநாயக முறையாகும். எல்லோரும் வாழ வேண்டும் இது தான் அதன் நியதி. இவ்வாறு அவர்கள் பொருதுவதற்கான தளம் நீதித்துறையாகும்.

சிங்கள ஊடகவியலாளர்களினால் தலைமை வகிக்கப்படும் ஆங்கில நாளேடுகளெல்லாம் ஏங்க ஆரம்பித்திருக்கின்றன. இதுதான் நாம் சொன்ன அந்தத் திருப்பம். இது இங்கு இப்படியிருக்க அங்கு தமிழ்நாட்டில் ஆனந்தவிகடன் விடுதலைப் புலிகளைப் பற்றிய ஒரு கருத்துக் கணிப்பீட்டினை நடத்தியிருக்கின்றது. இதன்படி விடுதலைப் புலிகளுக்கும் தமிழ் மக்களின் ஏகோபித்த ஆதரவு அங்கு இருப்பதாகக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஆனந்தவிகடன் ஒரு பிராமண ஆதிக்கம் கொண்ட ஊடகம் என்பதை நாமறிவோம். அது சென்ற தேர்தல்களில் ஜெயலலிதாவை ஆதரித்தது. திராவிட மணம் கமழும் எந்தப் போராட்டத்திற்கும் பிராமணர்களின் எதிர்ப்பு எவ்வளவு இருக்கும் என்பதை அனுபவ ரீதியாக நாம் உணர்ந்திருக்கின்றோம். ஆனந்த விகடன் இப்பொழுது இந்தக் கருத்துக் கணிப்பினை எடுக்க வேண்டிய தேவை என்ன? அதுதா ன் நாம் குறிப்பிட்ட அடுத்த திருப்பமாகும்.

உயர் நீதிமன்றத் தீர்ப்பை மதிக்காது ஒரு காட்டுமிராண்டி யுகத்திற்கு எங்கள் ஆட்சியாளர்கள் இட்டுச் செல்லுவது எப்படி எங்கள் மத்தியதரவர்க்கத்திற்கு இப்பொழுது உறைத்திருக்கிறதோ அதே போல சிங்களசமூகத்தின் கண்மூடித்தனமான அரசியல் இனவாதம் இந்தியாவின் ஆளும் வர்க்கத்தையும் பொறுமையின் எல்லைக்கே கொண்டு விட்டிருக்கிறது. இப்படியான நிகழ்வுகள் ஒவ்வொரு வாரமும் நடந்தவண்ணமே இருக்கின்றன. நிலைமைகள் மாறுகின்றன. நல்லது. ஆனால் மாற்றங்கள் ஏற்படும்போது அதனைச் சுற்றி இயங்கிக் கொண்டு இருப்பவர்கள்தான் அதன் பாதையையும் உருவத்தையும் தீர்மானிக்கின்றனர். இங்குதான் நாம் கவனமாக இருக்கவேண்டும். எங்களுடையதும் எங்களுடைய சந்ததியினரதும் வாழ்க்கையைத் தீர்மானிக்கும் விடயத்தை நாம் யாரோ ஒருவருடைய கைகளில் விடலாமா? இந்த நேரத்தில் இந்திய மக்களுடனும் இலங்கையில் உள்ள சிங்கள மக்களு டனும் எமக்கு என்ன தேவை அது எப்படி இருக்க வேண்டும் என்று சொல்ல வேண்டியுள்ள தருணம் வந்துவிட்டது. பயம் பயம் என்று நித்தமும் ஜெபித்துக் கொண்டிராமல் அதற்கான புத்திசாதுரியமான வழிகளைத் தேடவேண்டுமே. அப்படித் தேட விரும்புகிறவர்கள் இருக்கிறம் சஞ்சிகைக்கு எழுதிப் போடுங் களேன். நாம் உங்களைச் சந்திக்க எப்பொழுதும் தயாராக இருக்கிறோம்.

# பாதச் சலங்கைகள்

ஆனந்த நடனம் ஆடினாள் அவள்
அழகிய விழிகளால் கதை பேசினாள்..
அபி நயங்களால் வியந்து தோன்றினாள்
அடிப் பாதங்களால் தாளம் கூறினாள்.

கொஞ்சம் மொழி கலந்த இள மங்கை
கோடி இன்பங்களை அள்ளித் தந்தாள்
சின்னஞ் சிறு கிளியே என்று
ஜாலங்கள் காட்டி நின்றாள்
தகிடத திங்கின தொம் என்று
தாயையும் மிஞ்சி நின்றாள்

ஆடும் மயிலில் வருவான் அழகன்
ஆற்புதம் அரங்கில் ஆடிய வர்ணம்
மாறிடும் ஜதிகளும் மிருதங்க ஒலியோடு
பின்னிப் பிணைந்ததே பாதச் சலங்கைகள்...

அபி நயத்தோடு பாவமும் நடிப்பும்
அனுபவமிக்க நர்த்தகி உணர்வில்
மருண்ட விழிகளின் லாவண்யத்தில்
லயித் திட்ட மனங்களோ சொல்லியும் அடங்கா

அதிகாலை
என தூரில் விழித்தாக வேண்டும்!
புகழ் பெற்ற நல்லூரை நான் காண வேண்டும்!
விழிகளின் அசைவில் வேதனையே உணர்த்தி
வீறு கொண்டு தமிழ் தாகமே பெருக்கி
தாயகம் கனவினில்
தாண்டவம் ஆடி நின்றாள்...

**நவஜோதி ஜோகரட்ணம்**

**நன்றி**



# வானொலிக் கால



பயிற்சியில் கலந்து கொண்டவர்கள்

தெற்காசிய விளையாட்டுப் போட்டிகளுக்கான நேர்முக வர்ண னையாளர்களுக்கான பயிற்சி இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத் தாபனத்தின் பயிற்சிக் கழகத்தில் 1991 ஒக்டோபர் 21 ஆம் திகதியிலிருந்து நவம்பர் முதலாந்திகதி வரை நடைபெற்றது. இந்தியரான ஜஸ்விந்தர் சிங் எங்களுக்கு பயிற்சி யளித்தார். பயிற்சியில் என்னுடன் கலந்து கொண்டவர்களில் ஒருவர் தற்போது ஸ்ரீ லங்கா ஒப்சேவர் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருக்கும் தினே வீர வன்ச, பல ஆண்டுகாலமாக விளையாட்டு நிருபராக பல நாடுகளுக்கும்

# நினைவுகள்

19



கே. எஸ். பாலச்சந்திரன்

சென்று வந்த என் நண்பர். ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய மூன்று மொழிகளுக்குமாக ஏறக்குறைய 30 பேர் இரண்டு வாரங்கள் பயிற்சி பெற்றோம். பயிற்சியின் இறுதி நாளன்று தன்னிடம் பொதுவான கேள்விகளும் கேட்கலாம் என்று சொன்ன பொழுது ஜஸ்விந்தர் சிங்கிடம் சீக்கியர் களின் தலைமுடி, தாடி, உடைவாள், இரும்புக்காப்பு என்பனவற்றின் முக்கியத்துவத்தை கேட்ட தாக ஞாபகம் இருக்கிறது.

நேர்முகவர்ணனை செய்வதில் தடகளப்போட்டிகளுக்குத் (Athletics) தான் எங்களுக்குள் பெரிய போட்டி. அதன் முடிவு களைத்தான் யாவரும் ஆவலாகக் கேட்பார்கள் என்பது எங்களுக்குத் தெரியும்.. அடுத்ததாக உதை பந்தாட்டம். எல்லோருக்கும் பிடித்த விளையாட்டு. எனக்கு கூடைப்பந் தாட்டம் கிடைத்தது சற்று ஏமாற்றமாகத்தான் இருந்தது. (கனடா ஐக்கிய அமெரிக்கா நாடுகளில் கூடைப் பந்தாட்டத்திற்கு இருக்கும் மௌசு என்னை இப்போது பிரமிக்க வைக்கிறது. இங்கே கூடைப் பந்தாட்ட வீரர்கள் கூடை கூடையாக பணம் சம்பாதிக்கிறார்கள்.) கூடைப்பந்தாட்டம் பற்றிய நிறைய தகவல்களை சேகரித்துக் கொண்டுதான் இதற்காகவே புதிதாக கட்டப்பட்ட சுகததாச உள்ளரங்கத்திற்கு சென்றேன். வானொலியில் முக்கியமாக தடகளப்போட்டிகள் அல்லது நீச்சல் பற்றி நேர்முக வர்ணனை நடந்து கொண்டிருக்கும். எங்களோடு பயிற்சி பெற்றவர்களின் குரல் கேட்கும். திடீரென்று எங்களுக்கு சிலநிமிடங்கள் தருவார்கள். அப்போது அனேகமாக கூடைப் பந்தாட்டப் போட்டி ஆரம்பமாகி மும்முரமாக நடந்து கொண்டிருக்கும். அதற்குள் சுருக்கமாக (நடந்ததில்) சொல்ல வேண்டியதை சொல்




பயிற்சியின் முடிவில்

லிவிட வேண்டும்.

இந்தியா, பாகி ஸ்தான், இல ங்கை, பங்களாதேஷ், பூட் டான், நேபாளம், மாலைதீவுகள் ஆகிய நாடுகள் கூடைப் பந்தாட்டத்தில் பங்கு பற்றின.

சுகததாச உள்ளக விளையா ட்டு அரங்கிலிருந்து பேசுகிறேன் என்று ஆரம்பித்து இந்திய கூடைப் பந் தாட்ட வீரர்கள் துள்ளித் துள்ளி புள்ளி களை அள்ளிக் குவித்துக் கொண்டி ருக்கிறார்கள் என்று சொன்னேன். இந்திய அணியின் தலைவராக விளையாடியவர் ராம்குமார் என்ப வர். பின்னாளில் தேசியவிருது பெற்ற சிறந்த வீரர்.


இறுதிப்போட்டியில் இந்தியா பாகிஸ்தானைத் தோற்கடித்து தங்கப்பதக்கத்தை வென்றது. பாகிஸ் தானுக்கு வெள்ளிப்பதக்கமும் மூன் றாவது நிலையிலிருந்த இலங்கைக்கு வெண்கலப் பதக்கமும் கிடைத்தன. எது எவ்வாறிருப்பினும் ஒரு சர்வ தேசப் போட்டியொன்றில் என் தாய் மொழியில் நேர்முகவர்ணனை செய் யக்கிடைத்தது எனக்கு மறக்க முடி யாத அனுபவம் என்றே நினைக் கிறேன். விளையாட்டுக்களில் கிரிக் கெற்றில்தான் மோகம் எனக்கு. எனது சிறு வயதில் இருந்தே இங்கி லாந்தில் இருந்து ஒலிபரப்பாகும் ஆங்கில நேர்முகவர்ணனைகளை கேட்டு (புரிந்தது பாதி, புரியாதது பாதி என்றாலும்) ஆடுகளத்தில் நடப் பதை மனதில் உருவகித்து ரசித்த அனுபவம் உண்டு. தொலைக்காட்சி அறிமுகப்படுத்தப் படாத காலத்தில் சர்வதேச கிரிக்கெ ற்றோடு எங்களை இணைத்து வைத் திருந்தவை வானொலிவர்ணனைகளும் பத்திரி கைக் குறிப்புகளும் தான்.



சுகததாச உள்ளக விளையா ட்டு அரங்கில்

கிரிக்கெற் போட்டிகளின் ஸ்கோர் விபரங்களை இந்த வர்ண னைகளின் மூலம் அறிந்து பாடக் கொப்பிகளில் குறித்துக் கொண்டு படிக்கும் பாடங்களைவிட அவ ற்றை அக்கறையாக மனப்பாடம் செய்து கொண்டு திரிந்த காலம் அது. இலங்கையில் தமிழில் கிரிக்கெற் வர்ணனை செய்யப்படும் என்று நினைக்காத காலம். ஆனால் 70 களி லேயே சென்னையில் நடந்த டெஸ்ட் போட்டிகள் உள்ளிட்ட சர்வ தேச கிரிக்கெற் போட்டிகளில் ராம மூர்த்தி போன்ற தமிழ் வர்ணனை யாளர்கள் தொடக்கி வைத்த பணியை 80 களில் இலங்கையரான எஸ்.எம்.ஏ.ஜப்பார், கூத்தபிரான் கணேசன் போன்றோர் தொடர்ந்து அழகு தமிழில் வர்ணனை செய்திருக் கிறார்கள் என்ற விபரம் பின்னர் தான் எனக்கு தெரிய வந்தது.

எஸ்.எம்.ஏ. ஜப்பார் பற்றி இந்த இடத்தில் குறிப்பிட்டுத்தானாக வேண்டும். சானா அவ ர்கள் இலங்கை வானொ லியில் நாடகத் தயா ரிப்பாளராக இருந்த போது மிகச்சிறந்த வானொலிக் கலை ஞராக ஜப்பார் விளங்கினார். இந்தக் காலத்தில் சானாவோடு தன க்கு கிடைத்த மறக்கமுடியாத ஒரு அனுபவத்தை ஜப்பார் பின்வருமாறு கூறுகிறார்.


எஸ்.எம்.ஏ. ஜப்பார்

தன்னில் எந்த நடிகனின் சாய லும் விழுந்து விடக்கூடாது என்ப தில் மிக வும் கவனமாக இருந்த தாக வும் அதற்கு காரணமானவர் சானா தான் என்பதையும் ஜப்பார் நினைவு கூருகிறார். ஒரு நாள் நாடக ஒத்தி கையில் புயலாய் நுழைந்த சானா சொல்கிறார்.

"நான் இத்தனை பாடுபட்டு பயிற்றுவித்தது ஜப்பாரைத்தான். ஆனால் ஜப்பார் சிவாஜியாக இரு க்க நினைத்தால் Let him get out of the studio" நான் வானொலித் துறையில் காலடி எடுத்து வைத்த காலத்தில் சரித்திர நாடகங்களில் ஜப்பார் அவர் களின் தெளிவான தமிழ் உச்சரிப்பை, சிறந்த நடிப்புத் திறனை மேற்கோள் காட்டிப் பலரும் புகழ்ந்து சொல்வதைக் கேட்டிருக் கிறேன். அவரோடு நடிக் கும் வாய்ப்பு எனக்கு கிட்டவில்லை யென்றா லும் மானசீகமாக அவர் மீது மிகுந்த அபிமானம் அப்போ திருந்தே வைத்திருக்கிறேன்.

தமிழ்நாட்டில் தனி யாக தமி ழில் வர்ணனை செய்வதில் கொடு க்கப்பட்ட முக்கி யத்துவத்தின் பய னாக ஜப்பார் கூத்தபிரான்

ராமமூர்த்தி போன்ற வர்கள் எவ்வாறு திருக்குறளையும் பழமொழிகளையும் ஏன்.. வைரமுத்துவின் வரிகளைக்கூட மேற் கோள் காட்டி இலகுதமிழில் கிரிக்கெற்றை கிராமப் புறங்களுக்கும் எடுத்துச் சென்றார்கள் என்று வலைத் தளங்களில் வாசிக்கும் போது சுவையாக விருக்கிறது. அதே நேரத்தில் பொறாமை யாகவும் இருக்கிறது. இனி இலங்கையில் எவ்வாறு வானொலியில் தமிழில் கிரிக்கெற் வர்ணனை நிகழ்த்தப் பட்டது என்பதையும் நான் எப்படி அதில் சம்பந்தப் பட்டேன் என்ப தையும் கூறுகிறேன். அப் போது தெரியும் பொறாமைக் கானகாரணம்.

இலங்கை டெஸ்ட் அந்தஸ்து 1981 இல் கிடைத்த பின்னர் தனது முதலாவது டெஸ்ட் போட்டியை பெப்ரவரி 17 ஆம் திகதியிலி ருந்து 21 ஆம் திகதி வரை கொழும்பு சரவணமுத்து ஸ்டேடியத்தில் இங்கிலாந்து அணிக்கு எதிராக விளையாடிய போதுதான் வானொலியில் தமிழில் முதன் முதலாக வர்ணனை செய்யப்பட்டது. இந்தப் போட்டியில் இலங்கை அணி பந்துல வர்ணபுரவின் தலைமையின்கீழ் விளையாடி 7 விக்கெற்றுக்களால் இங்கிலாந்திடம் தோல்வியுற்றது.

வர்ணனை செய்தவர்கள் இலங்கை வானொலியின் அறிவிப்பாளரான காலஞ்சென்ற சரா. இம்மானுவேல் எஸ்.எழில்வேந்தன் ஆகியோர். ஆங்கிலம், தமிழ், சிங்களம் ஆகிய





எஸ்.எழில்வேந்தன்

மூன்று மொழிகளிலும் தொடர்ந்து நடை பெறும் இந்த வர்ணனையில் ஆங்கிலத்துக்கு கொடுக்கப்பட்ட முக்கியத்துவம் மற்ற இரண்டு மொழிகளுக்கும் கொடுக்கப்பட வில்லை. அப்போது கிரிக்கெற் சம்பந்தமான கலைச் சொற்கள் இந்த மொழிகளில் போதியளவு பாவ னையில் இல்லாதது ஒரு காரணமாக இருந்திருக்கக்கூடும். ஆனால் காலப் போக்கில் சிங்கள வர்ணனையா ளர்கள் முக்கியத்துவம் பெற அடுத்த படியாக ஆங்கிலம் இறுதியாக தமிழ் என்றவகையில் நேரம் ஒதுக்கப்பட் டது. இது எனது காலம் வரை தொடர் ந்தது. இப்போது எப்படியோ எனக்கு தெரியாது.

1992 இல் ஆகஸ்ட் மாதத்தில் அவுஸ்திரேலிய அணி முதன் முறை யாக 3 டெஸ்ட் போட்டித் தொடரில் பங்குபற்ற வந்தபோது தான் எனக்கு முதன்முறையாக கிரிக்கெற் வர் ணனை செய்யும் வாய்ப்பு கிடைக் கிறது. முதலாவது டெஸ்ட் போட்டி எஸ்.எஸ்.சி விளையாட்டு அரங்கில் 1992 ஆகஸ்ட் மாதம் 17 ஆம் திகதி திங்கட்கிழமை ஆரம்பமாகியது. அன்று வேலை நாளாகையால் வேலை செய்யும் இடத்திலிருந்தே, நானும் நண்பர்களும் ஸ்கோர் விபரங்களை அறிந்து கொண்டோம். ஆனால் அன்று சிங்களத்திலும் ஆங்கிலத்திலுமே வர்ணனை நடை பெற்றது. தமிழில் நடைபெற வில்லை. இந்தச் செய்தி அன்று நட ந்த பாராளுமன்ற அமர்வின் போது சொல்லப் பட்டது.

**(இன்னும் இருக்கிறது)**

# இப்படித்தான் தோன்றினான் பிரம்மன்

ரமேஷ் - பிரேம்

நன்றி

திருத்தித் திருத்தி எழுதினேன் என்னை
திரும்பத் திரும்ப திருத்தங்களை செய்தேன்
எழுத்தில் சொல்லில் வாக்கியங்களில்
இடைவெளிகளில் நிறுத்தற் புள்ளிகளில்
பொருள் மாற்றியும் வரிசை மாற்றியும்
பக்கங்கள் மாற்றியும்
அடித்ததும் சேர்த்ததும் அனேகப் பக்கங்கள்
ஒவ்வொரு முறை வாசிக்கும் போதும்
ஏதாவது ஒரு பிழை தட்டுப்பட்டபடி இருக்கிறது
ஏதோ ஒரு தருணத்தில்
எல்லாப் பக்கங்களும் புதிதாக இருக்கின்றன
இன்னும் பல பிழைகளுடன்
எந்த மூலப்பிரதியைப் படியெடுக்கும் முயற்சியிது
பிழையற்ற பக்கங்களை
உறுதி செய்ய இதை எதனுடன்
ஒப்பிட்டுப் பார்ப்பது
எழுதியவற்றில் திருத்தம் செய்ய
தொடங்கியதே முதல் பிழை
திருத்தம் செய்யாமல் நான் இருந்திருக்கலாம்
என்னை எழுதியவர்கள் கையிலேயே
பக்கங்களைத் தந்து விட்டு
எழுதியவன் வந்து வாசிக்கும் போது
எல்லாம் எழுதியபடியே
இருப்பதைக் காண முடியலாம்
எழுத்து முதல் பிழை
எழுதுதல் முதல் திருத்தம்



Asai Rasiak
08



எங்கட ஊருல, இப்பத்தயப் போலல்ல,
எல்லா வேலையும் எல்லோருக்கும் அந்தக்காலம்
ஒவ்வொண்டுக்கும் ஒவ்வொருகாலம் தெரியும்.
வெள்ளாமச் செய்கையைப் பொறுத்து, இருந்திச்சி.
வெதைக்கிற காலம், குருவிக்காவல் உழுற காலம்,
வெட்டுற காலம், சூடு போடுற காலம்,
காலத்தில அந்தந்த வேளை காலமெண்டு அந்தக்
குஞ்சி துவக்கம் கிழடு கட்டை நடக்கும். குழந்தை
எல்லா வேலையும் செய்யுங்கள். வரை எல்லாரும்

# நெருநல் நினைவுகள்

கவிஞர் திமிலைத் துமிலன்

## படியாத மாடும், பன்றி வேட்டையும்!



**அப்பாவுக்கு** ஊரிலயும் வயல் இரிந்திச்சி. படுவான் கரையிலயும் இரிந்திச்சி. சின்ன வயசில் நானும் உழவு வேலை செஞ்சிரிக்கிறன். உழவு மாடுகள் எல்லாம் புனையல் புனையலாக நிண்டிச்சி. வெள்ளண்ண எழும்பினா உழவு மாடுகளை சாய்ச்சிக் கொண்டு நுகத்தில பூட்டி ஏர்க்காலைக் கட்டி மேடியைப் பிடிச்சி, துவரங் கேட்டியைக் கையில எடுத்தா உழவுதான். எட்டுப் பத்துப் பூனையல்கள் வரிசையா உழது போறதா பாத்தா வடிவுதான். அந்த வடிவான காட்சிய இப்ப பாக்கவே வழியில்ல. முந்திப் போறவன்ட சாலஓரமாக கலப்பைய உட்டுப் போகணும் . இல்லாட்டி ஏச்சுத்தான் உழும். நாம்பன்மாடுகளை புதிசாக

உழவுக்கு பழக்கிற வேலையை அப்பா தான் செய்வார். அதுகள் குறுக்காக இழுத்துக் கொண்டோடும். அந்தப் புதுப் புணையல நானும் புடிச்சி உழுதிருக்கிறன். அப்ப குறுக்கால இழுத்துக் கொண்டு போய் கட்டுக்கு மேலாக பாய்ஞ்சி கலப்பையை கட்டுல ஏத்தி நுகம் பிரட்டிப் போட்டுதுகள். கலப்பை முறிஞ்சி போச்சி. அப்பா வந்தார். கேட்டிய என்னுட்ட வாங்கி எடுத்தார். அடி எண்டா என்ன அடி உம்மா உம்பா எண்டு கத்திக் கத்தி ஓடோட அடிச்சார். மாடுகளுட முதுகு விலாவெல்லாம் வரிவரியா தடிச்சிப் போச்சி. அதுக்குப் புறகு அதுகள் அடக்கொடுக்கமா உழுதுகள். அடியாத மாடு படியாது என்ன?


"அடியாத மாடு படியாது" எண்டால் அர்த்தம் என்ன? அடிக்காத புள்ளையள் படிக்காதுகள் எண்டு தான் நானும் நினைச்சன் ஏன், பெரும்பாலன சனங்கள் அப்படித்தான் எண்ணுதுகள். 1958 இல நான் ரெயினிங் கொலிச் முடிச்சுப் போட்டு, வேலையில்லாம இருந்தப்ப புதூரில ஒரு பள்ளியக் கட்டிப் படிப்பிச்சன். அப்ப தாய் தகப்பன்மார் தங்கட புள்ளையளைக் கொணர்ந்து சேர்ப்பாங்க. சேர்த்துப் போட்டு என்ன சொல்லுவாங்க தெரியுமா? "நல்லா அடியுங்க மாஸ்ரர், நாங்க ஒண்டும் கேக்கமாட்டம். எப்பிடியும் தம்புள்ளைகள் நல்லாப் படிக்கோணும். அடி உதவுற மாதிரி அண்ணன் தம்பி உதவ மாட்டான்"


அப்ப ஒருவர் எனக்கு நல்லாத் தெரிஞ்சவர், நான் படிச்ச சென்றல் கொலிச்சில எனக்கு மூண்டு நாலு வரிசத்திக்கு முதல் படிச்சவர். பேர் மயில்வாகனம். ஒரு பொடியனைக் கூட்டி வந்தார். "தம்பி,இவன் என்ட மருமகன், அக்காட மகன், சரியான மொக்கன், உங்களை நம்பித்தான் கொண்டாரன். கண்ணை மாத்திரம் வைச்சுப் போட்டு மத்த எல்லாத்தையும் உரியுங்கோ. ஒப்படைச்சுப் போட்டுப் போயிட்டார்.

இதிலிருந்து என்ன தெரியுது? நம்மட தாய் தகப்பன்மார், படிப்பைப் பொறுத்து அடிக்கிறதில வச்ச நம்பிக்க, மத்த ஒண்டுலயும் வைக்கல்ல. நான் புதூர்ப் பள்ளிலயிருந்து மாத்தலாகி வவுணதீவுப் பள்ளிக்கு



போனப்ப, அங்கொரு தலைமை வாத்தியார் இருந்தார். பேர் பொன்னுத்துரை மாஸ்ரர். அவர் அடில வைச்ச நம்பிக்கைய வேறொன்டிலயும் வைக்கல. கணக்குப் படிப்பிப்பார், படிப்பிச்சுப் போட்டு செய்யச் சொல்லி கணக்குப் குடுப்பார். பிழையாகச் செய்ஞ்சாப் போதும் பிரப்பம் பழம் தான். குமர்ப் புள்ளையள் எண்டாலும் சரி தான். ரெண்டு கையையும் சேர்த்து,பாவாடையையும் அதோட சேர்த்துப் புடுச்சிக், பிரம்பால விசுக் விசுக்கென்டு பின்புறமெல்லாம் கணக்கு வழக்கில்லாம விளாசல் தான். புள்ளையள் துடிச்சுப் போகுங்கள். என்னாலயே பாக்கத் தாங்காது. முகத்தைப் மத்தப் பக்கம் திருப்பிக்குவன். “தம்பி, இதுகளுக்கு ஈவிரக்கம் பாக்கப்படாது, அடியுதவுறது போல அண்ணன் தம்பி உதவ மாட்டான்” நான் என்னத்தைப் பேச பேச்சு மூச்சில்லாம எப்படியோ சமாளிச்சுக்குவன் அதுக்குப் புறகு கன்னங்குடாப் பள்ளிக்கு எனக்கு மாத்தம் வந்தது. படுவான் கரைப் பள்ளிகளுல படிப்பிச்ச அனுபவம், அடியப் பொருத்து ஒரு உண்மைய எனக்கும்





காட்டிச்சி. இப்பவும் நான் அன்னபால எதையும் சாதிக்கலாம் எண்ட நம்பிக்க உடையவன். ஆனாச் சில சூழல்களைப் பொறுத்து, அன்பு செய்யாத சாதனையை அடி செய்யுது. இப்ப "அடியாத மாடு படியாது" எண்டுறதப் பாப்பம். இஞ்ச படியாத எண்டுறது, அடங்கிப் போகாது எண்ட கருத்தில தான் வருகுது. இஞ்ச படிதல் - அடங்கிப் போதல் இது மிருகங்களைப் பொறுத்துச் சரிதான். இதக் கொண்டு மனிசப் புள்ளயளுக்கு பொருத்திச் செயற்படுவது அபத்தம் எண்டு தான் நினைக்கிறன்.

உழுற காலத்துக்குள்ளதான் வெதைக்கிற காலமும் அடங்கும். வெதைப்புக்கு முந்திய உழவை நிலையெடுப்பு எண்டு சொல்வாங்க. நிலையெடுப்பு ஒரு உழவேடையும் முடியும், ரெண்டு மூன்று உழவோடையும் முடியும். அதுக்குப் புறகு வெதைப்பு மொதல், கால்கட்டுவாங்க, கால் கட்டுறதெண்டா வெதைக்கிற நெல்லு ரெண்டு பக்கமும் ஒரு எல்லைக் கப்பால போகாம கட்டுப்படுத்ததுறத்துக்கு, கலப்பையால போடும் கோடாகும். ரெண்டு பக்கத்துக் கோட்டுக்கு மெசையில உள்ள அகலம் ரெண்டு பாகத்துக்கு கூடாது. கைப்பொட்டில நெல்லை எடுத்து பரவலாக எங்கும் விழக் கூடியதாக வீசிறது தான் விதைப்பு. விதைப்புக்குப் புறகு போடுற உழவு மறுத்தாலாகும் . ஒண்டு அல்லது ரெண்டு உழுவு போட்டுட்டா மறுத்தல் முடியும். மறுத்து முடிஞ்சதும் முளையளக் கொத்தி, அலையும் போட்டா வெதைப்பு முடிஞ்சுது. இந்த வேலைகளில சின்ன வயதில் நானும் ஈடுபடுறது வழக்கம்.

வயலெல்லாம் நல்ல ஈரமிருந்தா வெதைச்ச நெல்லெல்லாம் மொய்யெண்டு மொளைக்கும். வயலெல்லாம் பயிரேறியிரிக்கெண்டு சந்தோஷம் கரைபுரளும். இப்பத்தைய போல அடியோரம் போடுறதோ, யூரியா எறியிறதோ, குடலையொரம் போடுறதோ அந்தக் காலம் இல்ல. இதுகளுக்கெல்லாம் பதிலாகக், சூடு போட்ட கையோட எருக்கட்டுற வேலை துவங்கும். வயலெல்லாம் பரவலாக காலை போட்டுப் போட்டு மாடடைப்பம். அவ்வளவு

தான். அந்த மாட்டெரு ரெண்டு வரி சத்துக்கு நிண்டு புடிக்கும். பயிர் வளந்து குடல பறியத் தொடங்கினா தண்ணி கட்டுவம். குடல முத்திக் கதிர் பறியத் தொடங்கினா குருவிக் காவல் காலம் தான். குருவிக் காவ லுக்குப் போக ஆக்களில்லாட்டி குரு விக்காறப் பெடியனுகளப் புடிக்க வேண்டியது தான். நெல் விளைஞ்சி வெட்டி சூடு போட்டு ஒரு குறிப்பிட் டளவு நெல் அவனுக்குக் கூலியாகக் குடுக்கோணும். நான் அறிய அப்பா குருவிக் காறனகளப் புடிச்சதேயில்ல. பள்ளிக்குப் போகாத

நாள் முழுக்க நாங்க தான் குருவி திரத்துவம். அப்பா வெல்ல நாரா லையோ, சணலாலையோ கவண் செய்து தருவார். அதில சின்னச் சின் னக் கல்லை வச்சி வீசினா குருவிக் கூட்டம் விழுந்தடிச்சிப் பறந்தோ டும். கதிர் பறிஞ்சி, பால் புடிச்சாப் போதும் குருவியெல்லாம் பாட்டம் பாட்டமா வந்து உழும். தினையான் குருவிகள் ஆயிரக் கணக்கில சேந்து பாட்டம் பாட்டாம வரும். திரத்தாட்டி கதிரில ஒரு நெல் மணியும் மிஞ்சாது. இத விட தூக்கணங் குரு விகளுட தொல்ல பெரிசி. வயல் கட் டுகளில நிக்கிற பனை மரத்து ஓலைகளிலயெல்லாம் தூக்கணாங் குருவிகள் கூடு கட்டும். அந்தக் கூடு களெல்லாம் என்ன வகையான அரு மையான கைவண்ணம் தெரியுமா? நான் பாத்து ரசிப்பன். அப்பாவுக்கு எரிச்சல் வரும். துறட்டிக் கம்பக் கொண்டந்து பிச்சிப் பிச்சி வீசுவார். ஆனா உயரமான பனைகளில தூங் கிற கூடுகள ஒண்டும் செய்ய முடி யாது. அந்தக் குருவிகளும் பாட்டம் பாட்டமா வந்து விழும். அப்பாவு க்கு கோவம் வந்து தெண்டா ஒரு வராலும் தடுக்க முடியாது. துவக்கத் தூக்கி வந்து சுட்டுப் போடுவார்.

இருவது முப்பது தினையான்கள் ஒரு வெடில விழுந்து சாகும். ஆரம் பத்தில அப்பாட்ட ஒரு மருந்துத் துவக்குத்தான் இருந்திச்சி அதுக்குப் பிறகு ஒரு 12 டாம் நம்பர் தோட்டாத் துவக்கு வாங்கினார். அதில 4 ஆம் நம்பர்ச் சன்னத் தோட்டா போட்டுச் சுட்டா, நாப்பது அம்பது குருவிகள் விழுந்து சாகும். கோவ த்துல அப் படிச்



சுட்டாலும், அதால வாற நட்டம் அதிகம். சூடு பட்ட இடத்தில நிக்கிற கதிரெல்லாம் சிதைஞ்சு போகும். அதுக்குப் பிறகு குருவிகள வெடி கொழுத்தித் திரத்தினம். பகலுல இப்படியெண்டா ராவுல பண்டிகள் வந்து செய்யிற கொடும பெரிசி. எங்க ஊருல ஒரு பத்துப் பதினைஞ்சு ஊடுதான் மத்த எல்லா இடமும் காடு பண்டிக்காடு காட்டுல வெங்கி டாந்திப் பாம்பு, முயல், உக்கிளான் மட்டுமில்ல சருகு புலியும் கிடக்கும். ஆனா பண்டியள் நாள் தோறும் கொடுமை. நல்ல கொழுத்த வெள்ளாமயப் பாத்து கதிரிரெல்லாம் திண்டுற மட்டுமில்லாம, கொம்பால உழுது மட்டமடிச்சிப் போட்டுப் போகும்கள்.

பண்டி சுடுறதுக்காக நானும் அப்பாவும் போய் ஒளியிரிப்பம். ஒளியெண்டா காயான் பத்தையால வெட்டி அரை வட்ட வடிவத்துல நாட்டி, உள்ளுக்க நிலத்தில சாக்கு களப் போட்டு, சுட ஆயத்துமாக இரிப்பது எத்தனையோ நாளிருந்தாலும், ஒரு நாளாவது அப்பா பண்டி சுட்டதாக எனக்கு நெனவில்ல. நிலத்தில பண்டிக்காக ஒளியிரிக்கிறதில ஆபத்துமிரிக்கி. வெடிபட்ட பண்டி நேராக எங்கள நோக்கி ஓடி வந்தா எங்களக் கொம்பால வெட்டிப் போடும்.



ஒரு தரம் வயலுக்க நிண்ட ஒரு நாவல் மரத்துக்கு மேல பறண் கட்டி அதில ஏறி அப்பாவும் நானும் ஒளியிருந்தம். நாலஞ்சி முயல்கள் வந்து போச்சிதுகள். நடுச்சாமம் வரை பண்டி வர வேயில்ல. நடுச்சாமம் ரெண்டு மணியிரிக்கும் ஒரு தாட்டன் பண்டி வந்து கட்டில ஏறிச்சிது. காத்திருந்த அப்பா லெக்குப்பாத்து வச்சார் வெடி. ஒரு பெரிய சத்தத் தோட....

**தொடரும்**

# நட்பு

ரோமியோ

**நட்புதான்** வாழ்க்கை. அதற்கென்று ஒரு இலக்கணம் இல்லை ஒரு நல்ல நண்பன் அமைகிறதே ஒரு வரம்.

ஏனெனில் யாருடனும் பழகிப் பழகித்தான் புரிந்து கொள்ள முடியும்.

கஷ்ட நேரத்தில் தான் நண்பன் யார் பகைவன் யார் என்று தெரியும். எங்களோட பழகிறவன் எதற்காக பழகிறான். அவன் உண்மையான நண்பனா? இல்லை பகைவனா? என்பது காலப் போக்கில்தான் தெரியும்.

நண்பர்கள் ஏன் முக்கியம் என்றால் நாங்கள் நண்பர்களோடதான் வளர்கிறோம்.

நல்ல பழக்கங்களோ கெட்ட பழக்கங்களோ இதெல்லாம் நட்பினால் தான் வருகின்றது. ஒருத்தன் நல்லவனாக இருக்கிறதுக்கும் கெட்டவனாக மாறுகிறதுக்கும் நட்புதான் காரணம்.

இதனால் யாருடன் பழகும் போதும் அவர்களை நண்பனாக ஏற்றுக்கொள்கிறதுக்கு முன்பு யோசிக்க வேண்டும். நட்பை ஏற்றுக்கொண்டால் அந்த நட்பை கடைசி வரை காப்பாற்ற வேண்டும். நான் அப்படித்தான்.


இப்படி நாங்கள் சொல்லவில்லை நம்ம சுப்பர் ஸ்டார் ரஜினிகாந்தான் சொல்லுகிறார்.






வ.ஐ.ச.ஜெயபாலன்

# கோட்டாற்றங்




# பாகம் 6



**வன்னிக்கு வருகிற போதெல்லாம் பாலனை யாருமே துயில் எழுப்ப வேண்டியதில்லை. அங்கு எல்லா இசைகளும் எண்ணற்ற இன்ப அழுகுகளும் நிறைந்த அந்தக் காடு எப்பவும் கடிகாரங்களோடு அவனுக்காகக் காத்திருந்தது. போத்துக்கீசர் காலத்தில் இருந்தே காலம் காலமாய் கும்பிட்டு வாழ்கிலேன் நான் என்று நிமிர்கிற தமிழர்கள் புகல் என்று ஒன்றில் ராமேஸ்வரத்துக்கு அல்லது இந்த வன்னிக் காட்டுக்குத் தானே ஓடி வருகிறார்கள்.**

**நீண்ட** பயணத்தின் உடற் சோர்வுடனும் வழியில் ஆனையிறவு, கிளிநொச்சி, மாங்குளம் என்று சோதனைச்சாவடிகளில் ஏறி இறங்கி சிங்கள வசவுகளில் இழிவு பட்டு மன உளைச்சலுடனும் வருகிற பாலனைக் கண்டதும் வரண்ட செம்புழுதியைத் துடைத்துக் கொண்டு அந்தக் காடு பசுமையாகச் சிரிக்கும். காட்டின் சித்தத்தை அள்ளும் சிரிப்பிலும் நெழிப்பிலும் பறக்கும் முத்தங்களிலும் பேருந்தை விட்டு இறங்க முன்னமே பாலன் வசமிழந்து வழியத் தொடங்கி விடுவான். கர்வம் கொண்ட காடு அலட்சியமாய் பார் இன்னுமொருத்தர் விழுந்துகிடக்கிறார் என்று பறவைகளிடம் கண்சிமிட்டி விடுமாக்கும். பிறகென்ன

கட்டந்தரையையே தின்கிற பறவைகள் விழைந்த வயல் கிடைத்தால் விட்டு விடுமா. அந்தப் பிரதேசம் முழுவதும் பறந்து பறந்து பாலனைப் பாரடி, அவன் என்னடி காட்டிலயும் வழியிறான் பிறகு ஓரக் கண் சிமிட்டிச் சிமிட்டி காட்டுக்குத் தெரியாமல் என்னிலயும் வழியிறானடி. இவனை என்னடி செய்யிறது என்று கூடிக் கூடி கத்தியும் பாடியும் விருந்து கொண்டாடி விடுங்கள். நிச்சயம் இந்தக் காடும் பறவைகளும் ஈழத்து தமிழ் பேசும் பெண்கள் கல்லூரி ஒன்றில் தான் படித்திருக்க வேணும் என்று பாலனுக்குத் தோன்றும்.



ஆனாலும் ஆச்சரியம் பாலன் இவற்றையெல்லாம் ஆர்வமுடன் ரசித்ததுதான். இதுதான் பாலன். இதற்காகத் தானே அவன் சந்தர்ப்பம் கிட்டும் போதெல்லாம் நெடும் பயணமாய் வட காட்டில் உள்ள தங்கள் பண்ணை வீட்டுக்கு வந்து விடுகிறான்.

குயில் சந்தித்த முதல் வசந்தத்தில் இருந்து ஒவ்வொரு வசந்த ஆரம்பத்திலும் பூவரசம் பூக்களை முந்திக் கொண்ட 'மன்னிப்பு' பாலன் என்றபடி வந்துவிடும். 'மன்னிப்பு' என்ற தமிழ்ச் சொல்லை பாலனுடன் பழகியதில் குயில் கற்றுக்கொண்டிருந்தது. வசந்தம் முழுக்க பாலனைத் துரத்தித் துரத்தி பாடிப் பாடி மூர்க்கமாகக் காதலிக்கும்.

காலையில் திருப்பள்ளி எழுச்சி பாடுவதில் ஆரம்பித்து சாமத்தில் தாலாட்டுப் பாடுவதுவரை அவனையே சுற்றிச் சுழன்றுகொண்டிருக்கும். அவன் யாழ்ப்பாணம் போனால் குயில் தன் தோழிகளுடன் அங்கும் வந்துவிடும். பின் தோழிகளோடு பிரச்சினைப் பட்டு அவர்களைத் துரத்திவிடும் என்பது இந்தக் கதையோடு அவ்வளவு சம்பந்தப்படாத தனிக் கதை. விரிவுரைகள் நடந்துகொண்டிருக்கும்போதே மண்டபத்தின் வெளியே இருக்கும் மாமரத்தில் வந்து குந்தியிருந்து ஏழேழு பிறப்புகளிலும் தீராத தன் காதலில் உருகி உருகிப் பாட ஆரம்பித்து விடும்.

குயில் பாடத் தொடங்கிவிட்டால் பாலனுக்கு விரிவுரைகள் ஒன்றும் காதில் ஏறாது. அவனுக்கு முற்பிறப்பு ஞாபகம் வந்துவிடும். கன்னம் வலிக்கும். கன்னத்தைத் தடவி விட்டுக் கொள்வான். சென்ற பிறப்பு முழுக்க ஈருடலும் ஒரு மனமுமாக அவர்கள் ஒட்டி ஒட்டி உறவாடிக் கழித்ததெல்லாம் நினைவுக்கு வரும். சென்ற பிறப்பில் அவளைக் குயிலி என்றுதான்

அழைப்பான். சென்ற பிறப்பிலும் பாலன் பரந்து பட்ட மனிதாபி

ஒருவர் : அந்த முனிவர் முகத்தையே பாம்பு அடிக்கடி கொத்துகிறது ஏன் ?

மற்றவர் : அவர் முகத்தில் தவ·க்களை இருக்கே ?



மானியாகவே இருந்தான். மனிதர்கள் ஆணும் பெண்ணுமாக இருந்தார்கள். காதல் மனைவியாக இருந்தும் குயிலி சந்தேகப் பிராணியாகி விட்டதுதான் துன்பம். ஒருமுறை பாலன் சரஸ்வதி அம்மனை தீவிரமாக வழிபட்டுக் கொண்டிருந்தான். திடீரென அங்குவந்த குயிலி கோவில் என்றும் பார்க்காமல் பாலனுக்கு ஓங்கி ஓங்கி அறை அறையென்று அறைந்து விடுகிறாள். என்மீதா சந்தேகப் படுகிறாய் என்று சரஸ்வதி அம்மனிட்ட சாபத்தால்தான் இந்தப் பிறப்பில் அவள் குயிலாகவும் பாலன் கவிஞனாகவும் பிறக்க நேர்ந்தது.

அடுத்த பிறவியில் ஒரு குயிலாகப் பாலனைச் சந்திப்பாயென்றும் ஒரே ஒருவருடம் பாலன்மீது தொடர்ந்து சந்தேகப் படாமல் இருந்தாயானால் உனக்குப் பாவ விமோசனம் கிடைக்கும். பின்னர் சுவர்க்கத்தில் நீங்கள் இருவரும் நித்திய போகத்தில் திழைக்கலாம் என்று சரஸ்வதி அம்மன் சாப விமோசனமும் அருளியது. பாலனுக்கு எல்லாமே நேற்று நடந்ததுபோல நினைவுக்கு வந்தது.

சாபம் பெற்ற குயிலி குதிரைகளும் குதிரைவாலிப் புற்களும் மண்டிய ஒரு கடற்கரையில் உப்புக்காற்றுத் தாலாட்டும் வேப்ப மரத்துக் காகக் கூடொன்றில் பிறந்தாள். குயில் பருவமடைந்த முதல் வசந்தத்திலேயே டாக்டர் எஞ்சினியர் கனவுகளில் உலையும் யாழ்ப்பாணத்துப் பையன்களையே கவிஞர்களாக்கிக் கொண்டிருந்த ஒரு தேவதைகளின் வேம்படியில் பாலனைச் சந்தித்தது. அப்பொழுதுதான் பாலனுக்கு முதல் முறையாக முற்பிறப்பு ஞாபகம் வந்தது.

அதன் பின் எல்லா வசந்தங்களிலும் அந்தக் குயில் யாழ்ப்பாணத்துப் பல்கலைக் கழக மாமரங்களிலோ அல்லது வன்னிக் காட்டுக்குள்ளோ அல்லது அந்தக் காட்டின் நடுவில் இருக்கும் பண்ணை வளவு மாமரங்களிலோ வந்திருந்து காதலைப் பாடிக்கொண்டிருந்தது. பாட்டோடு




பாட்டாக பாலனுக்கு குயில் பாசையும் கற்பித்தது. அது கூ என்றும் குக்கூ என்றும் கூக்கூ என்றும் குயில் மொழி சொல்லிக்கொடுக்க பாலன் குரலெடுத்து குக்கூ என அரிச்சுவடி பயிலும் அழகு மனதை உருக்கும். ஆச்சரியப் படத்தக்க விதத்தில் மிக விரைவாகவே குக்கூ முதல் எழுத்தெல்லாம் என்கிற குயில் மொழிக் கவிதைகளைக் கூட பாலன் கற்றுத் தெளிந்துவிட்டான். ஆனாலும் பாலன் எல்லா உயிர்களையும் நேசிப்பவனாக இருந்தான். எல்லா உயிர்களும் ஆணும் பெண்ணுமாக இருந்தன.

அந்த அறியாத குயில் கண்ணா இனி ஒருவருடமில்லை என் ஆன்மா உள்ளவரைக்கும் உன்னைச் சந்தேகப்படேன் கண்ணா என்றபடி ஒவ்வொரு வசந்தத்திலும் பாலனைத் தேடி வரும். ஓராண்டில் பாலனுடன் சுவர்க்கத்துக்குப் போய் இடையறாத போகம் மகிழும் கனவுகளோடு வந்த முதல் சந்திப்பின்போதே சிக்கல் ஆரம்பித்துவிட்டது. முதல் வசந்தம் முடியுமுன்னமே குயில் சந்தேகத்தில் கோபித்துக் கொண்டு போய்விட்டது. அதன் பின் அதுவே பாலனும் குயிலும் என்கிற தொடர்கதையாகி விட்டது. குயில் ஒவ்வொரு வசந்தத்திலும் பாலன் என்று சொல்லிக் கொண்டு வந்துவிடும். பாலனுடன் பழகியதில் மன்னிப்பு, இதுதான் கடைசி போன்ற ஓரிரு மனித மொழிகளைக் குயில் அறிந்து வைத்திருந்தது. எனினும் ஒவ்வொரு வசந்தத்திலும் எதாவது நடந்து குயில் படக்கூடாத சந்தேகத்தைப் பட்டுக் கொண்டு தன் மனசையும் உடைத்துக் கொண்டு காணாமல் போய் விடும்.

சித்திரை வைகாசி கடந்து விட்டால் குயிலும் போய்விடும். அடுத்த கால் வருடத்துக்கு ஐயோ பாவமே இதுவா குயில்களும் வானம் பாடிகளும் வாழ்த்திப் பாட மலர்கள் சூடி வசந்தம் கொலுவிருந்த மாழிகைக் காடு என்று கேட்பீர்கள். ஈழம் முழுக்க ஈரத்தின் சுவடே இல்லாமல் பாலைத் திணையாய்க் கிடக்கும். ஈழம்போல பாலனின் கவி மனசும் வெக்கையில் காய்ந்து போய் விடும். பாலையின் வாழ்வியலே தென் இலங்கை, மலேசியா, சிங்கப்பூர், இங்கிலாந்து, ஐரோப்பா, கனடா என்று பொருள் வயின் பிரிதல்தானே. பாலனும் தன் ஜொல்னாப் பையோடும் ஒரு சேட்டு, ஒரு காற்சட்டை, ஒரு கோவணம், ஒரு துவாலை இவற்றுடன் ஒரு பற்பசை, சீப்பு சோப்புக் கண்ணாடி வாசனைப் பொருட்கள் அடங்கிய அலங்கார அலங்காரப்பை என அவனது முழுப்பொக்கிசங்களு மடங்கிய பயணப்பை யோடும் தேசசஞ்சாரம் கிளம்பிவிடுவான். இதுவும் குயிலுக்குப் பிடிக்கிறதில்லை. குயில் கோபித்துக் கொண்டு போனாலும் யாழ்ப்பாணத்துச் செம்மண் புழுதிபட்ட குயிலல்லவா. அது பாலன் போகக் கூடிய எல்லா ஊர்களிலும் ஒற்றர்களை நியமித்து விட்டுத்தான் கோபித்துக் கொண்டு போகும்.

வசந்தமும் குயிலும் போய் விட்ட பிறகும் அந்தச் சின்னக் காட்டுக்குள் நிறைய சாபம் பெற்ற தேவதைகளும் தேவர்களும் பறந்தும் நடந்தும் ஊர்ந்தும் நீந்தியும் திரிகிறது பாலனுக்குத் தெரிய வரும்.

அதிகாலையில் காட்டுக் கோழிகளின் முதல் குரலுக்கே பாலன் விழித்தெழுந்து இழுத்துப் போர்த்த படியே கம கமவென்று முல்லைப் பூ உதிரும் முற்றத்துக்கு வந்துவிடுவான். அடி வளவில் மயில் அகவத் தொடங்கும்போது வேப்பம் குச்சியை கவ்வியபடி காலைக் கடன்களுக்காக பண்ணை வீட்டின் முன்னே அவனை வழிபார்த்திருக்கும் காட்டுக்குச் செல்வான். பண்ணை வீட்டில் நவீன கக்கூஸ் இருந்தது. ஆனாலும் அங்கு கமழும் காட்டுப்



பூக்களும் சிறகசைக்கும் வண்ணத்துப் பூச்சிகளும் பாடும் பறவைகளும் தேவதைகளும் இல்லையே. பச்சைப் புறாக்கள் குறு குறுக்க ஆரம்பிக் கையில்தான் அவன் காட்டிலிருந்து வீட்டுக்குத் திரும்பி வருவான். மிகப் பெரிய வன்னிக்காடுகளில் ஒன்று அவர்களது பண்ணை வீட்டின் பின் புறத்தில் பச்சைக் கடலாக முட்டித் ததும்பிக் கொண்டிருந்தது. எனினும் பாலனுக்கு பண்ணையின் முன்னே நெடுஞ்சாலைக்கு மறு பக்கமாக இருக்கிற அந்தச் சின்னஞ் சிறு நூறு ஏக்கர் காடுதான் வாழ்வாக இருந் தது.

இந்தக் காடுக்கு இன்றுவரை பாலன்தான் சிற்றரசன். ஆனாலும் என்ன செய்வது. அந்தக் காட்டை வெட்டி விற்றுப் பசியாற ஒரு முத லாளிக் கூட்டமே அலைந்து கொண் டிருந்தது.

பாலியாற்றங் கரையால் ஓடிவந் தததில் இருந்து பாலன் காட்டுப் பக்கமே போகவில்லை. வாந்தியும் வயிற்றோட்டமும் காச்சலுமாக படுக்கையில் சுருண்டு கிடந்தவனை காடு வாவா என்று அழைத்துக் கொண்டிருந்தது. ஆற்றம் கரையில் இருந்து ஓடிவந்தபோது நேரே யாழ்ப்பாணம் போய் விட வேணு



மென்றுதான் முதலில் நினைத்தான். அங்குதான் அவனுடைய பல்கலைக் கழகம் இருந்தது. பல்கலைக்கழக வளாகத்துக்குள் மட்டுமே ஏற்படு கிற அசுர பலமும் உணர்கிற பாது காப்பும் அச்சமின்றி வெளிப்படுகிற கோபமும் அவை விரியக்கூடிய சுதந்திர வெளியும் உடனடியாகவே அவனுக்கு வேண்டியிருந்தது. ஆனா லும் இத்தனை புதிய இரகசியங் களோடு முன்னைப்போல அச்சமில் லாமல் வழி நீள எதிர்ப்படும் இரா ணுவத் தடை முகாம்களைக் கடந்து செல்ல முடியாது என்பதை உணர்ந்த போது அவனுக்குக் குலை நடுங்கி யது.

இத்தனை இரகசியங்களுக்கும் எப்போ பழக்கப்படுவது எனக் குழம் பியபோதுதான் பாலனுக்கு வயிற் றைக் கலக்கத் தொடங்கியது.

மூன்றாவது நாளாக அடிபட்ட பாம்பாகக் காட்டின் பாடலுக்கும் அசையாமல் கட்டிலில் நெழிந்து கொண்டிருந்தான். காதலிக்கிற காடு கூட அவனுக்கு அச்சம் தந்தது.

நேற்றுவரை வீதியின் சந்தடிகள் எல்லாம் தன்னைத் தேடி இராணுவ வண்டிகள் வருகிற பிரமையை ஏற் படுத்திக் கொண்டிருந்தது. இன்று மனம் அடங்கியிருந்தாலும் வீதி யில் மோட்டார் வாகனம் ஒன்று தரித்து ஹோர்ன் அடிக்கிற சத்தம் கேட்டபோது அச்சமாக இருந்தது. மீனாட்சி வீட்டின் தலைவாசலால்

தட தடவென்று ஓடிப்போனாள். பின்னர் கேட் திறக்கிற சத்தம் கேட்டது. பாலன் துணுக்குற்றுக் காதைத் தீட்டிக் கொண்டிருந்தான். வெளியில் பேசிக் கேட்பது தமிழ் என்பது ஓரளவுக்கு உறுதிப்பட்ட பின்னர்தான் அவனது கை விரல்களின் நடுக்கம் அடங்கியது. பார்த்தவன் பாடே இப்படியென்றால் பட்டவன் பாடு என்னாகும் என அவன் மனம் பதறியது. அன்றாடம் ஒடுக்குதலை எதிர்த்து முரண்பட்டுக்கொண்டிருந்த இளைய பெடி பெட்டையளுக்காக அவனது மனசு கசிந்துருகியது.

தொடரும்


# நேயர் கடிதம்

யோவ்... யாராவது கஸ்டப்பட்டு செலவழிச்சு பிரமாண்டமாப் படம் எடுத்தால் உமக்குத் தாங்காதோ.. சிவாஜியைத் திட்டனீர். இப்பொழுது தசாவதாரத்தை கீழே விழுத்தி மிதிக்கிறீர். பாவம் கமல்.... சும்மா ஒன்றுமில்லாத சிவாஜியை அடாபுடா என்று விளம்பரப்படுத்திய தைக் கண்டு வெறுத்து ஏதோ தானும் செய்ய வேண்டும் என்று இன்னொரு மெகா படத்தை எடுத்தார். உமக்கு ஏனய்யா எரியுது... சரி, தன்னை உலக நாயகன் என்று பீற்றி ஈகோவை ஏற்றிக் கொண்டு போகட்டுமே.

அப்படியும் எத்தனை அருமையான பாத்திரப் படைப்புக்களும் காட்சிகளும். இந்திய அரசு உத்தியோகத்தராக வந்து 'ராவ்' 'ரோ' ஜோக்ஸ் அடித்ததைப் பார்த்து சிரித்து வயிறு நோவெடுத்து விட்டது. இந்திய சிவில் சேவை உத்தியோகத்தரைப் போலவே அற்புதமாக நடித்திருந்தார். ஒரு பஞ்சாபியாக அவருடைய நடை, உடை பாவனைகள... அப்பப்பா..!!

இதெல்லாம் உமது கண்ணுக்குத் தெரியவில்லையா? விமர்சனமாம் விமர்சனம்

கமல் ஜீவி
கொட்டாஞ்சேனை



உங்கள் கருத்துக்கள் எங்களுக்கு முக்கியம்.
உங்கள் கடிதங்கள் வரவேற்கப்படுகின்றன.

ஆசிரியர்

# அசதி

காலை விழிப்பில்
கண் சிமிட்டும் கவிதைகளை
காபி... சிற்றுண்டி
மதிய உணவுத் தயாரிப்பில்
கண்டு கொள்ள முடிவதில்லை
நறுக்கிய காய்கறிகளின் கழிவை
ஒதுக்க நேரமற்று,
பாத்திரங்களைக் குவித்துப் போட்டு
அவசரமாய் மூடி ஒதுக்கி
ஓட்டமும்...நடையுமாய்
பேருந்து நிலையம்
காட்சிகளைப்
பார்த்து......பாராதிருக்கையில்
பளிச்சிட்டு மறையும்
கவிதை வாள்கள்
வீடு திரும்பி
பெருக்கிய போதும்
பாத்திரம் தேய்த்த போதும்
தோசை ஊற்றிய போதும்
பால் சூடாக்கிய போதும்
நினைத்துக் கொண்டேதானிருந்தேன்
"எழுதி விட்டுத்தான் படுக்க வேண்டும்"
இன்றும் வந்துவிட்டதெனக்கு
கவிதைக்கு முன்
தூக்கம்.

நன்றி

**இளம்பிறை**





# வில்லன் வேடத்தில் ஜொலித்த எஸ். ஏ. நடராஜன்



தாராபுரத்தைச் சேர்ந்த எஸ். நடரா ஜன் நாடக நடிகராக தனது வாழ்க்கை யைத் தொடங்கினார். ஜுபிடர் பிக்சர்ஸ் சின் ஒப்பந்த நடிகராக இணைந்து சிறு சிறு வேடங்களில் திரைப்படத்தில் பின்னர் நடித்து வந்தார். பெயர் சொல்லக் கூடிய வேடமாக அபிமன்யு படத்தில் ஜயத்ரதன் பாத்திரத்தில் நடித்தார், அதனைத் தொடர்ந்து 1948 இல் 'மோகினி' படத்தில் நடித்தார். எஸ்.ஏ. நடராஜனை ரசிகர்கள் மத்தியில் இனம் காண வைத்த படம் 1949 இல் வெளிவந்தது அதுதான் கன்னியின் காதலி.

வசந்தபுரி கலைக்கும், கவிதைக்கும் ஆதரவுதரும் ஒரு கலையழகுமிக்க நகரம். அந்நாட்டு மன்னன் வசந்தகுமாரன், சிற ந்த கலாரசிகனும், அழகனும், கம்பீர தோற்றமும் கொண்டவன். கன்னியின்

# கலைந்த பக்கங்கள்...

மயில்வாகனம்
சர்வானந்தா

காதலியில் கதாநாயகன் வேடத்தில் வசந்த குமாரனாக 1946 ஆம் ஆண்டு எஸ்.ஏ. நடராஜன் நடித்து வெளிவந்தது. இதில் கதாநாயகியாக நடித்தவர் மாதுரிதேவி

மொடேர்ன் தியேட்டேர்ஸ் 1950 இல் தயாரித்து மாபெரும் வெற்றி பெற்ற படம். மந்திரிகுமாரி கலைஞர் கருணாநிதி கதை வசனம் எழுதி வெளி வந்த படத்தில் கதாநாயகன் எம். ஜி. ராமச்சந்திரன், இதில் பார்த்திபன் என்ற வில்லன் பாத்திர மேற்று நடித்தார். இவருக்கு ஜோடியாக நடித்தவர் மாதுரிதேவி. மந்திரிகுமாரியில் எஸ். ஏ. நடராஜனின் வசனங்கள் ரசிகர்களைக்





கவர்ந்தது, அவரது அழுத்தம் திருத்தமான வாய் மொழி கலைஞர் கருணாநிதிக்கு பெயரெடுத்துக் கொடுத்தது.

அதில் சில வரிகள் ..பூனை எலியைக் கவ்வாமலிருந்தால், பாம்பு கீரியைப் பிடிக்காமலிருந்தால்

நானும் கொள்ளையடிப்பதை நிறுத்துவேன். *1950* இல் கிருஷ்ணவிஜயம் வெளிவந்தது எஸ்.ஏ. நடராஜனுக்கு கிடைத்த வேடம் சாணுரன்

**தயாரிப்பாளராகவும், டைரக்டராகவும் உயர்ந்து விட்ட நடராஜனை பிற தயாரிப்பாளர்கள் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்ய பின்வாங்கினார்கள்**

*1951 இல் கைதி, 1952 இல் ஜமீந்தார், 1953 இல் அழகி இவை அனைத்தும் ஜூபிடேர்ஸ் பிக்சர்ஸ் தயாரித்த படங்கள்.*

எஸ். ஏ. நடராஜனுக்கு பெயர் பெற்றுக் கொடுத்த மற்றுமோர் படம் *1954* இல் வெளி வந்த 'மனோகரா' புருஷோத்தம ராஜனின் ஆசை நாயகி வசந்த சேனை வசந்த சேனையின் கள்ளக்காதலனாக நடராஜன் நடித்தார். மாபெரும் வெற்றிப் படமான மனோகராவில் நடராஜனின் காதலியாக நடித்தவர் ரி.ஆர்.ராஜகுமாரி



1954 இல் வெளிவந்த மற்றுமோர் படம் புதுயுகம் கதாநாயகன், வில்லன் ஆகிய இருவேடங்களில் நடித்து வசன உச்சரிப்பில் தனித் தன்னையும், வித்தியாசமான அங்க, அசைவுகளோடும் வில்லன் நடிப்பால் உயர்ந்த நடராஜன் 1955 இல் சொந்தக் கம்பனியை ஆரம்பித்ததோடு டைரக் செய்யவும் ஆரம்பித்தார். போவேட் ஆர்ட் பிலிம்ஸ் என்ற பெயரில் ஆரம்பித்து தயாரித்து, நடித்து, டைரக்ட் செய்த படம் நல்ல தங்கை, கதை, வசனம் ஏ.பி. நாக ராஜன். 'நல்ல தங்கை' 1955 இல் வெளிவந்து சுமாராகவே ஓடியது. அதனைத் தொடர்ந்து அடுத்த படத்திற்கு பூஜை போட்டார். இந்த வேளை பிற தயாரிப்பாளர்களின் படங்களிலும் நடித்தார். அவ்வாறு நடித்து 1955 இல் வெளிவந்தது முல்லை வனம் இரண்டாவது சொந்தப் படம் கோகில வாணி தயாரித்து, டைரக்கட் செய்து, நடித்த 1956 இல் திரைக்கு வந்தது.



தயாரிப்பாளராகவும், டைரக்டராகவும் உயர்ந்து விட்ட நடராஜனை பிற தயாரிப்பாளர்கள் நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்ய பின்வாங்கினார்கள் என்பதை தொடர்ந்து அவர் நடித்த படங்கள் வராததன் மூலம் ஊகிக்க முடிகிறது. மூன்றவதாக 'உயிர் காப்பாள் உத்தமி' எனும் படத்திற்கு பூஜை போட்டு சில ஆயிரம் அடிகள் நடராஜன் தயாரித்தார். தொடர்ந்து படம் எடுக்க முடியாத அளவு செலவு வந்ததும் படம் முடியவில்லை.1950 இல் சங்கிலித் தேவன் படத்தில் ஒரு சுமாரான வேடத்தில் நடித்தார். அதன் பின் அவர் பற்றி செய்திகள் எதுவும் கிடைக்கவில்லை.


# மக்களை மையப




இந்த சார்க் மாநாடு வந்ததால
சுதியா கொழும்ப சுத்திப் பார்க்க
முடிஞ்சுது 'ஏனெண்டா றோடெல்லாம்
மூடி வைச்சிருந்ததால நாள் முழுக்க
சுத்திக் கொண்டேயிருந்தன'



ஆஹா.. கட்டாக்காலி
நாய்களையெல்லாம் பிடிச்சிட்டு
போயிட்டாங்கள். றோட்டில
நிம்மதியாய் போய்வரலாம்.



pizza

டார்லிங்

# ப்படுத்திய சார்க்

அப்பாடா ஒருகிழமை லீவு விட்டாச்சு
ஹாயா வீட்டயிருந்து டீவி பார்த்துட்டு
இருக்கவேண்டியதுதானே..



கொழும்பு சும்மா அந்தமாதிரி
இருக்கு. வீதியெல்லாம் கிளீனா
துடைச்சு ஒரு குப்பையும்
இல்லாம வலு கலாதியா
இருக்குதெல்லோ..



இப்படி மணித்தியாலக்
னக்கில றோட்டை மூடி
ச்சிருக்கிறாங்க இனி
சென்றருக்குப் போய்
சையும், நேரத்தையும்
வீணாக்காம இஞ்ச
து காதல் செய்வம்
செலவும் மிச்சம்..







# இந்தியத் தமிழ் சினிமா கடந்து வந்த பாதை




## இந்திய தமிழ் சினிமா 75 வருட நிறைவு காண்கிறது.




**- சர்வா -**

**முதல் சினிமாவை மட்டுமல்ல முதல் திரைப்பட அறிவையும், தொழில்நுட்பங்களையும் உருவாக்கியவர் அமரர். திரு. நடராஜ முதலியார். அவரது நினைவுகள் இல்லாது கழிந்து போன 75 வருட சினிமாவின் ஆழமான அத்தியாயங்களுக் குள் அமிழ்ந்துபோனவர்களின் நினைவுகளோடு....**



முதல் பேசும் படம் காளிதாஸ்



எச்.எம்.ரெட்டி

மனிதனின் ஐம்புலன்களோடும் குறிப்பாக அவனது இயல்பான உணர்ச்சியோடு சம்பந்தப்பட்ட ஒரு அழகியல் வடிவம். அதன் தாக்கம் மற்ற எல்லாத் துறைகளையும் விட அதிகமானதாக விளங்கியது. ஓவியத்தில் கண்களுக்கு மட்டுமே வேலை. கலை, கவிதை போன்றவற்றிற்கு சிந்தைக்கு மட்டுமே வேலை. ஆனால் நாடகம் சினிமா போன்றவற்றிக்கு அவையவங்கள் அனைத்துக்குமே வேலை. இவை ரசிகர்களின் உணர்ச்சியை தட்டி எழுப்புகிறது. இந்த உணர்ச்சியைப் பெறுவதற்கு ஒருவனுக்கு படிப்பறிவோ, எழுத்தறிவோ, தேவையில்லை. சராசரியான ஒருவனால் நாடகத்தையோ, திரைப்படத்தையோ ரசிக்க முடியும்

இந்த ரசனை 1930 இல் இந்திய தமிழ்த் திரை உலகில் ஆரம்பமானது. 1930 இல் சினிமா தனது பயணத்தை ஆரம்பித்த போது அப்போதைய படைப்பாளிகள் தங்களிடம் எது இருந்ததோ அதையே மக்களுக்கும் அளித்தார்கள். அதனையே மக்களும் முழுமையாக ஏற்றுக்கொண்டார்கள். புராணங்கள், இதிகாசங்கள், தலைமுறை தலைமுறையாக சொல்லப்பட்டு வந்த கிராமியக்கதைகள், பன்நெடுங்காலங்களுக்கு முன்னர் நிகழ்ந்த வீர தீர சாகசங்கள், கண்ணீரை வரவழைக்கும் சோக நிகழ்வுகள் போன்றவற்றையே ஆரம்பகால திரைப்பட தயாரிப்பாளர்களுக்கும், இயக்குநர்களும் வழங்கினார்கள்.

1931 இல் எச்.எம்.ரெட்டி அவர்கள் இயக்கி வெளிவந்த முதல் பேசும் படம்



தியாகராஜபாகவதர்



கண்ணாம்பா




என்.எஸ்.கிருஷ்ணன்



எம்.ஜி.ஆர்



காளிதாஸ் இதனைத் தொடர்ந்து 1932 இல் சம்பூர்ண அரிச்சந்திரா, 1933 இல் வள்ளி திருமணம் என்பன வெளி வந்தன. தமிழின் முதல் பேசும் பட இயக்குனர் என்ற பெருமையைப் பெறுபவர் எச்.எம். ரெட்டி அவர்கள் ஆரம்ப காலத்தில் புராணப் படங்களோ அதிகமாக தயாராகி ரசிகர்களின் மனதைக் கவர்ந்து. இயக்குனர்கள் ராஜா சந்திர சேகர் தயாரித்த சம்பூர்ண அரிச் சந்திரா. இது 1932 இல் வெளியானது. ராஜா சாண்டோ தயாரித்த பாரிஜாத புஷ்பராகம் *(1932)*, சத்தியவான் சாவித்திரி *(1933)*, நந்தனர் *(1933)*, தொடர்ந்து வெளிவந்தன.



இந்த வழியையே பின்னால் வந்தவர்களும் தொடர்ந்தனர். எம்.கே. தியாகராஜபாகவதர், கண்ணாம்பா, என்.எஸ். கிருணணன், எம்.ஜீ.ஆர் நடித்து சந்திரசேகர் தயாரித்த அசோக் குமார், வீ.ஏ. செல்லப்பா, டி.பி. ராஜலட்சுமி நடித்த கோவலன், அப்பய்யா தேவர், அங்கமுத்து நடித்த நந்தனர், தியாகராஜபாகவதர், பாலசரஸ்வதி, என்.எஸ்.கே நடித்த திருநீலகண்டர், சிவகவி போன்ற படங்கள் புராணங்களில் வருகின்ற கதாபாத்திரங்களை அடிப்படையாக வைத்து தயாரிக்கப்பட்டவையாகும். சதி அகல்யா, சதி அனுசுயா, பக்த ராமதாஸ், பக்த மீரா, கண்ணகி, நல்லத்தங்காள், இராவணன் போன்ற படங்கள் வழிவழியாக சொல்லப் பட்டு வந்த கதைப் பாத்திரங்களை திரைப்படங்களாக உலாவ விட்டனர்.

புரட்சிகரமான படங்களை பின்னாட்களில் உருவாக்கிய டைரக்டர் கே. சுப்பிரமணியம் கூட ஆரம்ப கால கட்டடத்தில் பவளக் கொடி, குசேலா, நவீன சாரங்கதாரா போன்ற படங்களை இயக்கினார். 1934 இல் வெளி வந்த பவளக் கொடியில் ஏழிசை மன்னர் எம்.கே. தியாகராஜபாகவதர், எஸ்.டி. சுப்புலட்சுமி, பாவநாசம் சிவன் ஆகியோரை அறிமுகப்படுத்தினார். பி.யு. சின்னப்பா, பி. கண்ணாம்பா ஆகியோர் கோவலானவும், கண்ணகியாகவும் நடித்து 1942 இல் 'கண்ணகி' வெளிவந்தது. யு. ஆர். ஜீவரத்தினம், எம்.எஸ். சரோஜா, என்.கே. ஆகியோர் நடித்த இப்படத்



சமுதாய அவலங்களைச் சுட்டிக் காட்டிய பராசக்தி திரைப்படம்

தின் அமோக வெற்றிக்கு இளங்கோவனின் வசனம் பெரும் உதவியாக இருந்தது. எஸ்.எம். சிறிராமுலு நாயுடு இயக்கி ஜி.ராமநாதன் இசையமைத்த சிவகவி 1934 இல் வெளிவந்து மாதக் கணக்கில் ஓடியது சிவகவியில் நடித்த தியாகராஜபாகவதருக்கும், வசனம் எழுதிய இளங்கோவனுமே பெரும் பங்காற்றினர்.

இதன் பின்னர் நல்லவை, தீயவை எனக் கருத்தன்மையோடு பிரித்து கதா பாத்திரங்களைப் படைத்தார்கள். தீய சக்திகள் கடைசியில் அழிந்தே தீரும் என எடுத்துக் காட்டின. இந்த அழிவுக்குக் காரணம் கடவுள் என்றும் அயோக்கியர்களை கடவுள் அழிப்பார் எனவும் எடுத்துக் காட்டிய இப்படைப்புகள் கற்பு புனிதமானது என்றும் கற்புக்கரசி நினைத்தால் மழை பெய்யும் என்பது மட்டுமல்ல இறந்து போன கணவன் கூட உயிர்த்தெழ முடியும் எனவும் ஆரம்பகாலம் படங்கள் சித்திரித்தன. இவ்வாறான படங்கள் ஆரம்பகாலத்தில் அமோக வரவேற்பைப் பெற்றன. பின் கதையில் சிறிது மாற்றத்தைக் காணக்கூடியதாக இருக்கிறது. சமுதாயச்சீர்கேடுகளுக்கு விலைமாதர்கள், பேராசைக்காரர்கள் போன்றோர் காரணம் என எடுத்துக் காட்டினர். தன் கணவனின் முதல் மனைவியின் மகனே தன்னிடம் தவறாக நடந்து கொள்ள முயன்றதாக ஹரிதாஸ் படத்தின் வில்லி பழி சுமத்தும் அளவிற்கு மகன் உறவு முறை கொண்ட கதாநாயகனிடமே மையல் கொண்ட அளவுக்கு பாத்திரங்கள் சித்திரிக்கப்பட்டன. சமுதாய அவலங்களைச் சுட்டிக் காட்டிய பராசக்தியிலே குணசேகரன் மாத்திரமல்ல அவனது குடும்பத்தின் துயரத்திற்கு ஒரு விலை மாது தான் காரணம் என்று கலைஞர் எழுதியிருந்தார். "ஓ ரசிக்கும் சீமானே வா ஜொலிக்கும் உடையணிந்து களிக்கும் நடனம் புரிவோம்" என்ற பாடலுக்கு ஆடிய குமாரி கமலாவையும் இதில் பணத்தை இழக்கும்



பி.யு. சின்னப்பா



சுப்புலட்சுமி



கலைஞர் கருணாநிதி



சிவாஜி கனேசன்



குணசேகரன் பாத்திரத்தை ஏற்று நடித்த சிவாஜியையும் மறக்க முடியுமா?

தமிழ்த் திரைப் பட வரலாற்றின் துவக்கத்தில் தனது நகைச்சுவை வசனங்கள் மூலமாகவும், நகைச்சுவை பாடலூடாகவும் நடிப்பின் மூலமாகவும், சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்த பெருமை என்.எஸ். கிருஷ்ணன் அவர்களுக்கே உண்டு. தெருக்கூத்து, வில்லுப்பாட்டு என்பவற்றைச் சேர்த்து சாதி, மதபேதம், மற்றும் அறியாமையைப் போக்குவதில் அவர் மக்களுக்கு நல்ல செய்திகளைத் தந்தார்.



திரை உலகில் தேவதாசிகள் சபிக்கப்பட்டவர்கள். மக்களின் ஏச்சுக்கும், பேச்சுக்கும் ஆளானவர்கள் என்பதை மாற்றியமைத்த முதல் படைப்பாளி சரச்சந்திரர். தனது தேவதாஸ் திரைப்படத்தில் மிதமிஞ்சிய குடிபோதையில் தெருவில் விழுந்து கிடக்கும் கதா நாயகனை தனது வீட்டுக்கு கொண்டு வந்து பாதுகாக்கும் மனிதாபிமானியாக ஒரு விலை மாதை சித்திரிக்கிறார். 1955 இல் வெளியான தேவதாஸ் படத்தில் நாகேஸ்வரராவ், சாவித்திரி ஆகியோர் பிரதான பாத்திரமேற்று நடித்தனர். இதில் விலைமாதுவாக லலிதா நடித்திருந்தார். இதே போல 1937 இல் மற்றுமோர் படம் விலை மாதுவை கௌரவப்படுத்தி வெளிவந்தது. அதுதான் சிந்தாமணி. இதில் தியாகராஜ பாகவதர், அஸ்வத்தாமா, செருக்களத்தூர் சாமா ஆகியோர் நடித்திருந்தனர்.

இப்படத்திற்கான பாடல்களை பாபநாசம்சிவன் எழுதியிருந்தார். 1943 இல் இளங்கோ வடிகளின் சிலப்பதிகாரம் வெளிவந்தது. இதில் வீ.ஏ செல்லப்பா கோவலனாகவும் டி.பி ராஜலட்சுமி கண்ணகியாகவும் நடித்த இப் படத்தை ராஜா சாண்டோ இயக்கியிருந்தார். இதே கதை பூம்புகார் என்ற பெயரில் கலைஞர் கருணாநிதியின் கைவண்ணத்தில் பின்னர் வெளியாகியது. எஸ் எஸ். ராஜேந்திரன், விஜயகுமாரி, கே.பி. சுந்தராம்பாள் ஆகியோர் நடித்திருந்தனர்.

இந்நிலையில் விடுதலைப்



போராட்டம் தொடர்பான படமும் வெளி வர ஆரம்பித்தது. சிவாஜி, ஜெமினி, எஸ். வரலட்சுமி, பத்மினி ஜாவர்சீத்தாராமன் ஆகியோர் நடித்த வீர பாண்டிய கட்டப்பொம்மன், சிவாஜிகணேசன், எஸ். வி. சுப்பையா, டி.கே. சண்முகம் போன்றோர் நடித்த கப்பலோட்டிய தமிழன் ஞான ராஜசேகரன் இயக்கத்தில் தங்கர் பச்சான் ஒளிப்பதிவில் சாயா ஜிசிண்டே, தேவயானி ஆகியோர் பாரதியாகவும்,செல்லம்மாவாகவும் நடித்த பாரதி, றிச்சேட் அட்டன் பரோவின் காந்தி போன்ற விடுதலை போராட்ட வீரர்கள் பற்றிய காந்தி,தேச ஒற்றுமையை வலியுறுத்தி சிவாஜிகணேசனின் பாரதி விலாஸ் தேசத்துரோகியாக இருப்பவர் தான் பெற்ற மகனாலும் அவனை கைது செய்யும் தேசபக்த பொலீஸ் அதிகாரியாக சிவாஜி கணேசன் நடித்த தங்கப் பதக்கம், தாய் நாட்டுக்கு எதிராக வேற்றுநாட்டுக்கு உளவு சொன்ன கணவனையே சுட்டுக் கொன்ற அந்த நாள் இலஞ்ச ஊழல் அற்ற இந்தியாவைப் படைக்க விரும்பிய தேசபக்தனின் கதையான கமல்,மனிஸா கொய்ராலா, சுகன்யா நடித்த இந்தியன் என்பவற்றை இங்கு குறிப்பிட வேண்டும்.

அதே போல் விடுதலைக்குப் பிறகு சுதந்திரப் போராட்ட வீரர்கள் எவ்வாறு உதாசீனம் செய்யப்படுகிறார்கள் என்பதை சித்திரித்த அந்திமந்தாரை கோந்தீஜியின் இறுதி நாட்களையும் அவரைக் கொல்வதற்கு கோட்சே கும்பல் எவ்வாறு திட்டமிடுகிறது என்பதையும் சித்திரித்த கமல், ராணிமுகர்ஜி நடித்த ஹேராம் என்பனவும் சினிமா வரலாற்றில் குறிப்பிட வேண்டியவை. இந்திய விடுதலைக்குப் பிறகு தேசியவாதிகளின் பங்களிப்பு இயல்பாகவே குறைந்து போயிற்று. பி.ஆர். பந்துலு போன்றவர்கள் விடுதலைக்குப் பிறகும் கூட விடுதலைப் போராட்டத்தை அடிப்படையாக வைத்து சில படங்களை உருவாக்கினாலும் அவை விடுதலைப் போராட்டத்தை அடிப்படையாக வைத்து சில படங்களை உருவாக்கினாலும் அவை வரலாற்றுப் பதிவுகளாகவும் கடந்த கால சம்பவ நினைவூட்டல்களாவுமே அமைந்தன.



டி.பி ராஜலட்சுமி



ஜெமினி கணேசன்




யு. ஆர். ஜீவரத்தினம்



பத்மினி

# கடலைத் தேடுகின்ற நதி....

(உண்மைச் சிறுகதை)



**இவளைப்** போல பெண்மணிகளை ஊர் உலகிலே கண்டிருப்பீர்களா? இவளைப் பற்றி பேசும் போதெல்லாம் இப்படியே எனக்கு எண்ணத் தோன்றும். எனது முதல்ப் பார்வையிலே எந்த வித விதமான அலைகளையும் என் கவனக் குளத்திலே அவள் ஏற்படுத்தவில்லை ஆனால் பின்னொரு நாளிலே இந்தக் குளத்திலேயே சுனாமியை வரவழைத்தவள். ஆனாலும் அவள் வித்தியாசமான னவள். யாராவது அவளுக்காக பரிந்து பேசினால் கூட அதைப்பற்றி எள்ளளவும் அக்கறைப்பட மாட்டாள். அதே போல சினம் வந்து அவள் மீது சுடு சொல் கொண்டு திட்டினாலும் கூட எக்குறையும் பட மாட்டாள். என்னடா இவள் பாலுக்கும் கள்ளுக்கும் பாகு பாடு தெரியாமல் எல்லோரையும் நம்புகிறாளோ என்று அவளைக் கடிந்து கொண்டாலும் கூட கவனிக்கவே மாட்டாள்.

அவள் பெயர் கௌசல்யா

ஒரு முறை என் மனைவியே எனக்கு அவளை அறிமுகம் செய்தாள். நான் இருக்கும் நகரிலிருந்து எண்பது கிலோ மீற்றர்களுக்கு அப்பால் இருக்கும் லிங்கன் என்ற ஊரிலியே வாழ்கிறாள். அங்கே இருக்கும் சிறிய அகதி முகாமுக்குள்ளேயே அவளது வாழ்க்கை கரைகிறது.

சட்டப்படி திருமணமானவள் என்ற சான்றிதழை கொடுத்திடத் தவறிய கதியால் எனது மனைவி யும் ஏமாற்ற வேண்டும் என்ற திட்டப்படி செயலாற்றிய ஒருவன் போட்ட சதியால் கௌசல்யாவும் அந்த முகாமிலேயே வாழ வேண்டிய நிர்ப்பந்தம். இவர்களோடு வயது போன ஒரு அம்மாவுமாக மொத்தம் மூவரே அவளுக்கு என்று அந்த முகாமிலே இருக்கக்கூடிய பந்தம்.

தனது தங்கப் பெட்டகத்தை யாருமே அறியாதபடி திறந்து பார்த்து மூடிவிடுகின்ற உலோபி போலவே எப்பாலும் அபூர்வாக அதுவும் உதடுகளுக்குக் கூட தெரியாமலே அவள் சிரிப்பாள். தேவையின் பொருட்டே யாருடனும் பேசுவாள் அதுவும் பணத்தை எண்ணி எண்ணிச் செலவிடும் சிக்கனவாதி போல வார்த்தையினை அளந்து அளந்தே பேசுவாள்.

அவளது சொந்த ஊரை எனக்கு சரியாக நினைக்கவில்லை. யாழ்ப்பாணத்திலே இருக்கும் ஏதோ ஒரு ஊரைச் சேர்ந்தவளாம். இங்கு எப்படி வந்திருப்பாள் என்று அறிய விரும்பினால் எள்ளுச் செடி மீது இடி வீழ்ந்த அந்தக் கதையினைச் சொல்லியே ஆக வேண்டும்.

இது ஒரு பெருங்கதை, அக் கதையின் நாயகனாகி




வந்தவனே அவளை உயிரோடு எற்றியிருக்கிறான் சிதை. மாப்பிள்ளைச் சந்தையிலே விலையாகியே ஜேர்மனிக்கு வந்தவள். அவளின் ஊர் நிலவரம் பற்றி அறிவதற்கு ' நீர் வளமுண்டு நில வளமுண்டு நிம்மதி ஒன்றுதான் இல்லை' என்பது போல யுத்தக் கறையான்கள் அரித்துத் தின்று கொண்டு தர்பார் நடாத்தும் தேசத்திலே வாழ்ந்த சராசரிக் குடம்பங்களிலே அவளது குடும்பமும் ஒன்று. இவள் குழந்தையாக இருக்கையிலையே தந்தையின் உயிரினை துப்பாக்கிகள் உறிஞ்சிக் கொண்டன. பின் நாளில் தாயின் அணைப்பிலும் ஒரே ஒரு தம்பியின் பாசப் பிணைப்பிலும் வளர்ந்தாள்.

வெந்த புண்ணிலே வேல் பாய்ந்தது என்பார்களே அதை அவளது தாயின் இயற்கைச் சாவு வந்து சொல்லிக் காட்டியது. கௌசல்யா சோர்ந்து விடவில்லை வாழ்ந்தாள். தனக்காகவும் தம்பிக்கா கவும் வாழ்ந்தாள். எப்படித்தான் ஓட்ட விழித்து உண்டாலும் கூட எங்காவது இலையின் ஓரத்தி லே ஒட்டி இருக்கும் பருக்கை சோறு போல இருளாகிப் போன அவள் வாழ்வுக்கு ஒளியேற்ற சில நல்லவர்கள் அங்கேயும் இருக்கத்தான் செய்தார்கள். அவளுக்கென்று ஒரு வரனைத் தேடினார் கள். வந்த வரனோ எந்நாளும் கூடவே அவளோடு வரான் என்று யாருக்குமே அப்போது தெரிய வில்லை. பிள்ளையார் பிடிக்கப் போய் குரங்காக மாறிய கதையாக அது ஆனது. பொதுவாக வெளியூர் மாப்பிள்ளைகளுக்கு உள்ளூரிலே மதிப்பு அதிகம் என்பதையும் தாண்டி சிவா என்ற இறைவன் பெயரைக் கொண்டவனே மணாளனாக வரப் போகிறான் என்பதை இட்டு அவளுக்கு இன்னும் இரட்டிப்பு மகிழ்ச்சி.

ஈசன் சிவாவோ உமை அம்மை என்ற ஒருத்திக்கு மட்டுமே தன்னிலே பாதியை தானம் கொடுத்திருந்தானம். ஆனால் இந்த சிவாவோ சட்டப்படி மட்டும் மூவருக்கு வாழ்க்கைப் பட்டிருக்கிறான்.

இவர்களுள் ஒருத்தியை மட்டுமே தாயாக்கினான். மற்றையவரை பிள்ளைக் கனி தராத காயாக்கினான்.

இறுதியில் அனைவரையும் புறத்தே விட்டு ஜேர்மனிக்குத் தாவித் தனித்திருந்தான். நிரந்தர வதிவிட அனுமதிகூடக் கிடையாத இவனுக்கு துணைக் கென இன்னொருத்தியை இறக்குமதி செய்வதற்காக தரகரை நாடினான்.

எங்கள் தரகர்களோ பரிமேலழக ரையும் கம்பரையும் விழுங்கி ஏப்பம் விட்டவர்கள். அவ்வளவு தூரத்துக்கு மாப்பிள்ளைகளையும் மணப் பெண் களையும் பற்றி அதி உச்ச விபரணை செய்தே திருமணத்தை முடித்து விடுவார்கள். பின்னாலே வரும் பிடுங்கல்களுக்கு பதில் சொல்ல அவர்கள் இருந்தால் தானே.

தரகரின் அதி உச்ச வருணனை யாலே இவனது மாய வலைக்குள் அகப்பட்டவள் கௌசல்யா எனும் மீன். சிவா எனும் வண்டைப் பொறு த்த வரை அவள் அப்போதைய தாகத்தைத் தீர்க்க வந்த தேன் அவ்வளவுதான்.

**காலத்தின் சவுக்கு உனது முகத்திலும் வயோதிபக் கோடுகளைக் கீறும்.**

**கோலத்தின் தூரிகை உனது தலையிலும் வெள்ளை நரைகளைத் தீட்டும்.**

ஜேர்மனி வருவதற்கான செல வைக் கூட இவளே ஏற்கவேண்டு மென்ற நிர்ப்பந்தத்தை தரகர் ஊடாக சிவா கொடுத்தான். அதன் காரணத் தாலே இருந்த ஒரு வீட்டையும் அவள் பன்னிரண்டு இலட்சத்துக்கு விற்றாள்.

இவ்வளவு பணத்தைக் கொடுத் துவிட்டும் கூட அவள் ஒன்றும் விமா னத்திலே வந்து நேராக ஜேர்மனி யிலே குதிக்கவில்லை. விமானத் திலே பறந்ததை விட அவள் கால்கள் நடந்த தூரமே

அதிகம் என்று கூறுமளவிற்கு சீனப் பெருஞ்சுவர் போல நீண்டு கிடந்தது பயணம்.இருந்த போதும் கூட தனது துணைவனுக்காகவே துயரங்களைப் பொறுத்தாள்.

வெள்ளைப் பனி மலையின் மீது உலாவுவோம் என்று பாரதி பாடி னாலும் பாடிவிட்டான் அந்தப் பனி மலைகளிலே முட்டியும் மோதியும் உருண்டும் பிரண்டும் உலாவி மாண்டு போவதெல்லாம் ஏதிலியா கிப் போன ஈழத் தமிழினம் தானே. முட்கம்பி வேலிகளுக்கிடையே தவி ழ்ந்தும் போலந்து நதிகளுக்குள்ளே மூழ்கியும் பயணத்தைத் தொடர்ந் தாள். பாலை வனமாகி வெடித்த நாக்கிற்கு பனித்துளிகளைப் பிழிந்து ஊற்றினாள். இருந்த போதும் பசி அவளைப் பிடித்துத்தின்றது.

இப்படித்தான் இடர் மிகு பய ணங்களை பொறுத்தாள். வரும் என

நம்பிய வசந்தத்திற்காகக் தன்னையே ஒறுத்தாள். பயணத்தரகர்கள் எனும் அழுக்கு மேகங்களிடையேயும் அசுத்த வாயுமண்டலங்கள் எனும் துட்டர்களிடமும் சிக்காது தப்பித்து பூமித் தேகத்தை தொட்ட தூய மழைத் துளி விழுந்த இடமோ சாக் கடையானது.

ஏதோ கடையிலே வாங்கிய பொருட்கள் மனுதுக்கு திருப்தி இல்லாது போகும் போது திருப்பிக் கொடுக்கலாம் என்று சில கடைகள் அறிவிப்பது போலவே கௌசல் யாவையும் எண்ணிக்கொண்டு இவள் மீதான மோகத்தையும் முப் பது நாளோடு முடித்துக் கொண் டான். பின் அவளையும் ஒதுக்க ஆரம்பித்தான். அஃறிணை க்கும் உயர் திணைக் கும் வித்தியாசம் அறியாத வனாக் கினான் சிவா எனும் அஃறிணை.

அதற்கான காரணங் களை தனது நிராகரிப் புக் காக தோரணங்களா க்கினான். மையலில் மையல் குன்றிய தால் சமையலில் சுவை இல்லை என்றான். இர சம் வைக்கச் சொல்வான் வைத்தால் சுவை இல்லை என்று ஏசுவான். இரசத்திலே பிழையில்லை அவனுக்கு யார் மீதோ விரசம் வந்திருப்பது தான் உண்மையாக இருந்தது. விரும்பியபடி செய்வதற்கு அவளோ பாதகம் என்பதால் அவ ளின் சாதகம். சரியில்லை என்றான்.

அரசியிலிலே அறிவு இல்லை என்றான். இலங்கையிலே அவளது அன்றாட வாழ்வியலோ அரிசி இயலுக்காக போராட்டம் செய்கை யிலே அரசியல் பற்றி எப்படி அவ ளாலே அறிந்திருக்க முடிந்திருக்கும் இவளைத்தான் அரசியல் அறிவற்ற ஞானசூனியம் என்றான்.

பூமி சுழலுகிறது என்பதையும் உலகம் உருண்டை என்பதையும் இன்று வரை ஏற்க மறுக்கும்.



**இதுவரை சிந்திய கண்ணீர்க் கடலுக்கு அணைபோடுவான் இந்தத் துணைவன் என்றால் அவன் கடலை சமுத்திரமாக அல்லவா ஆக்கினான்.**

பாமரர்கள் இருக்கின்ற உலகத்திலே அவளும் ஒருத்தி என்பது எவ்வகையிலே அவளது தப்பாகும். இதற்காக இந்த நாட்டையே கேவலமாக்குகின்ற காவலனை கூண்டிலேற்றிவதை விட்டு அந்த அப்பாவிப் பெண்ணை தண்டிப்பது சரியா ஆக்கிமிடிசுத் தத்துவத்தையும் அடம்சிமித்தின் பொருளியல் கொள்கைகளையும் பிடித்த பின்னரா எல்லோரும் வெளிநாட்டுக்கு வருகின்றனர். இங்கே பலர் விமானத்திலே பறக்கும் போதே தாங்கள் பிறந்ததாகவும் பிரசவத்திற்கான அலுவல்களைக் கூட எலிசபத்து மகாராணியே நேரில் நின்று பார்த்ததாகவும் கதை விடுகிறார்கள்.

காலத்தின் சவுக்கு உனது முகத்திலும் வயோதிபக் கோடுகளைக் கீறும். கோலத்தின் தூரிகை உனது தலையிலும் வெள்ளை நரைகளைத் தீட்டும். ஆராதித்த அழகோ உனை ஏறெடுத்தும் பார்க்காது போகும் இது தானே வாழ்க்கையின் நியதி இந்த நியதிகள் அவனுக்கு எப்படி விளங்கும். கழுத்திலே விழவந்த முடிச்சோ அவளின் மூச்சை நெருக்கியது. அட்சதை அரிசியோ வாய்க்கு அரிசியாகியது. இவனோ அக அகழை தரிசிக்கத் தெரியாத குருட்டு விழியால் புற அழகினைத் தேடினான். தமிழ் சினிமா என்பது இளசுகளை மட்டுமல்ல பழசுகளையும் தான் மிக அதிகமாகவே காயப்படுத்தி இருக்கிறது. இல்லாவிட்டால் கனவுக் கன்னிகளை எல்லாம் கல்யாணம் செய்யக் கேட்குமா.

எனக்குத் தெரிந்த ஒரு இளைஞன் தான் உழைக்கும் பணத்தை எல்லாம் தொலை பேசியிலே பேசிப் பேசியே செலவழித்து விடுகிறானாம் யாரோடு என்றால் தமிழ் நாட்டில் உள்ள பிரபலமான ஒரு தமிழ் நடிகையோடுதான்.

எனது உறவினர் ஒருவருக்கோ வயது நாற்பதைத் தாண்டியும் மணம் நடக்கவில்லை காரணம் தனக்கு வரப்போகும் பெண் வெள்ளையாக இருக்க வேண்டும் என்று கொழும்பிலேயே காலத்தை ஓட்டுகிறார். அரைக்கிலோ முகக் களிம்பிலே சிம்ரானுக்கு வாழ்க்கை ஓடுவதோ அடைமழையிலே மொத்த அழகும் கரைந்துவிடும் என்ற விடயமோ ஏன் இவர்களுக்கு இன்னும் விளங்கவில்லை. அழகு மெழுகைப் போன்றது என்பதை எந்த ஆசான் வந்து இவர்களுக்கு சொல்லிக் கொடுக்கப் போகிறார்கள்.



அந்த நகரத்திலே இருக்கின்ற நல்லவர்கள் என்று தங்களுக்குத் தாங்களே சான்றிதழ் கொடுப்பவர்களும் ஊர்ப் பெரியவர்கள் என்று தங்கள் தோள்களில் தாங்களே பீதாம்பரம் போட்டுக் கொள்பவர்களும் கூட இவ்விடயத்திலே அமைதியையே காத்தனர். வந்து விழுந்துவிடும் சில எலும்புகள் தடைப்பட்டு விடுமோ எனும் பயமே இதற்குக் காரணம்.

சிவாவுக்கு கொஞ்சம் கார் திருத்தும் வேலைகள் தெரியும் என்பதாலே அவனோடு முரண்பட்டால் இலவசமாகத் திருத்தப்படும் காருக்கு ஆப்பு வைக்கப்பட்டு இரவல் சேலையிலே கொய்யகம் கட்ட முடியாது போகுமே என்ற கவலை அவர்களுக்கு. அவளோ கல்லானாலும் கணவன் என்றபடி இருக்க அவன் மனசோ கல்லாக மாறியது மட்டுமல்ல கௌசல்யாவை ஒரு தேரை போல கல்லுக்குள்ளையே சிறை வைத்தான்.

தான் இதுவரை சிந்திய கண்ணீர்க் கடலுக்கு அணைபோடுவான் இந்தத் துணைவன் என்றால் அவன் கடலை சமுத்திரமாக அல்லவா ஆக்கினான். இவளைப் போன்ற வேறு ஒரு பெண்ணெனின் போ என்று அவன் முகத்திலேயே உமிழ்ந்திருப்பாள். ஆனால் இவளோ தன்னை ஏற்றுக் கொள்ள மறுபடியும் வருவான். என காட்டிலே கைவிடப்பட்ட தமயந்தியாக காத்திருக்கிறாள்.

நளன் தமயந்தியை பிரிந்த காரணமோ வேறு. தன்னோடு வந்து காட்டிலே துயர் உறக் கூடாது என்பதற்காகவே தமயந்திக்கு அந்தப் பிரிவு. ஆனால் இந்த சிவாவோ தன்னை நம்பி வந்தவள் துயர்படுவாள் என்று தெரிந்தும் அவளை நட்டாற்றிலே கைவிட்டான்.

தான் அழகில்லை என்பதால் தானே தன்னை விலக்கினான் இதனை சீர் செய்தால் தன்னை மறுபடி ஏற்றுக் கொள்வான் என்றே இவள் இப்போதும் நம்புகிறாள். இதற்காகவே அழகு சாதனப் பொருட்களை எல்லாம் வாங்கிப் பூசுகிறாள். இதை விடக் கொடுமை யாதெனில் எறும்பு சேர்ப்பது போல

சேர்த்து வைக்கின்ற மாதாந்த உத விப் பணத்தை எல்லாம் அப்ப ப்போ வந்து கவர்ந்து செல்கிறான் இந்த மானமுள்ள கணவன். வெளியே அவன் நிற்க அவனது நண் பர்கள் வந்து அந்தப்பணத்தை வேண் டிச் செல்கிறார்கள்.

ஆனால் இப்போது சில கால மாக யாரும் அவளைத் தேடி வருவ தேயில்லை. காரணம் அவன் வேறு நாட்டுக்கு ஓடிப் போய் விட்டா னாம். நண்பர்களே இவள் ஒரு கிரா மத்துப் பறவை தான். இடிபாடுகளுக் கிடையே இற ங்கி வந்த நதி தான். ஆனால் அவளுக்கும் இதயம் இருப்பதை மறந்து போகிறீர்களே.


கௌசல்யா நிலையை எண்ணி மனம் வருந்துவோரும் உண்டு. அதையே பெரும் குறையெனச் சொல்லி அவள் மனத்தை வருத்து வோரும் உண்டு அப்படி யாரேனும் அவளைக் கிண்டல் பண்ணும் போதிலோ அல்லது குத்திக் கதை பேசும் போதிலோ கீறல் விழுந்த ஈரப் பலா பாலை பொசிவது போல கண்ணீரைப் பொசிவாள். அதைத் தவிர அவளால் வேறென்ன தான் செய்ய முடியும். இங்கிருக்கும் பெண் ணிய வாதிகளும் கூட பட்டி மன்றங் களோடு மட்டும் தமது பணி முடிந்து விட்டதென்று நின்று விடுகிறார்கள். சந்தங்கள் சேரவில்லை என்பதற்காக பாடலைச் சிரச் சேதம் செய் வதற்கே வருந்தி இருக்கிறேன். பந்தங்கள் சேரக்கூடாது என்பதற்காக இவன் மனைவி எனும் ஆதாரத்தையே சேதாரம் செய்பவனைப் பற்றி எழு தாமல் விடுவேனா

**இங்கிருக்கும் பெண்ணிய வாதிகளும் கூட பட்டி மன்றங்களோடு மட்டும் தமது பணி முடிந்து விட்டதென்று நின்று விடுகிறார்கள். சந்தங்கள் சேரவில்லை என்பதற்காக**

நிலாவை பிடித்து தருவேன் என்று கூறி சோறூட்டி விடும் தாயின் தந்திரத்தைப் போல கணவனோடு ஒன்று சேர்ந்து வாழ வழி செய்து தருவோம் என்று கூறி தங்களுக்குத் தேவையான பலவற்றை அடைகின் றனர் சிறு மதி படைத்த சில மனி தர்கள் உங்களில் யாருக்கேனும் தங் கையாக தாயாக மகளாக அவள் இருந்திருந்தால் எண்ணிப் பாருங்கள் அவளுக்கு நிகழ்ந்த இந்த இரணத்தின் ஆழத்தை...! அவன் இப்பொழுது வேறு நாட்டுக்கு தலைமறைவாகி விட்டபோதும் கூட அவன் வரு வான் என்று காத்திருக்கிறாளே இந்த வைதேகி

நல்லதோர் வீணை செய்து அதை நலம் கெடப் புழுதியில் எறி வதுண்டோ?

எஸ். இராமையா




# மழை

மழை பெய்தால்
பசுமை
வெள்ளமானால்
சாக்காடு


குடாநாட்டில் கையடக்க தொலைபேசி
பாவனையாளர்கள் மீது
கடுமையான கட்டுப்பாடுகள்..
COVERD
JAFFNA
Sanju..

# உன் சமையலறையில்



## சுமையை குறைக்கலாமா?

(எம்.தயானி)

நான் 12 வயதில தொடங்கினது. இப்ப எனக்கு 75 வயதாகுது. இன்னமும் நான் முடிக்கலை. நாளுக்கு நாள் புதிசா ஒவ்வொன்று கண்டு பிடிக்கிறன். அதானால சந்தோஷப்படுற என் மகன், மருமகள், பேரப்பிள்ளைகளின்ற முகத்தைப் பார்க்கிறப்ப மனசுக்கு சந்தோஷமாகவும் திருப்தியாகவும் இருக்குது. என் கையில வலுவிருக்கிற வரை இதை நிறுத்த மாட்டேன். என ஒரு பாட்டி கூறுகிறார். அவரின் 30 வயது பேத்தியோ பாட்டி மாதிரி இதெல்லாம் இரசிச்சுச் செய்ய எனக்கெங்க நேரம் கிடைக்குது. காலையில வேலைக்குக் கிளம்பிற அவசரத்தில கையில் கிடைக்கிறத வேக வேகமா செய்து முடிச்சு போகவே நேரம் போயிடுது. திரும்ப வந்து செய்யிற தின்னாலும் களைப்பா இருக்கும். லீவு நாட்களில கூட இதுக்கு நேரத்தை வீணாக்க முடியாது என்கிறார். தலைமுறை வேறுபட்டு நிற்கும் இந்த இடம் சமையல் அறைதான். அட சமையல் தானா? என்று இளக்காரம் வேண்டாம். அது உண்மையிலேயே ஓர் பெரிய கலையாம். என் சமையலால குடும்பத்தையே கைக்குள்ள வைச்சிருக்கன். என்னோட சமையல சாப்பிட வெண்டே என் மகன் மருமகள் எல்லாம் வருவாங்க. மருமகளே மெச்சிக்கிற மாமியார நான் தெரியுமா? என்கிறார் அந்த 75 வயதுப் பாட்டி. அவர் சொல்வது உண்மைதான். என் மாமி கைப்பக்குவம் யாருக்கு வரும்? இத்தனை வருசமா அந்த பக்குவத்துக்கு கிட்ட கூட என்னால போக முடியலை என்கிறார் மருமகள்.

பாட்டி ஒவ்வொன்னும் பாத்துப் பாத்து செய்யிறாங்க. மிளகாய் தூள் தேவைன்னா கூட மிளகாய் மற்ற சரக்கு தூளுக்குத் தேவையான சாமான்கள் எல்லாமே வாங்கி அதை வறுத்து அரைச்சு செய்யிறாங்க. ஆனா நாங்க எல்லாமே தயாரா

வாங்கிக்கிறம். அம்மா காலத்திலேயே மிளகாய் தூள் கடையில வாங்கத் தொடங்கியாச்சு. அதில கைப்பக்குவத்தை எப்படி எதிர்பார்க்க முடியும்? அம்மா கூட மாறியிருக்காங்க என படிப்படியான மாற்றத்தின் மூலம் பாட்டியின் கைப்பக்குவத்துக்கு காரணம் கண்டுபிடித்துக் கூறினார் பேத்தி.



மிளகாய் தூள் மாதிரி சின்னச்சின்ன பொருட்களைத்தான் நான் வாங்கினன். ஆனா இவ எல்லாமே கடையில தானே வாங்கிக்கிறா. நான் தேங்காயை வாங்கி துருவி பிழிஞ்சு பால் எடுத்தன். ஆனா இவ பாலாவே வாங்கிக்கிறா. இவ்வளவேன் ரொட்டி, இடியப்பம் கூட சூடாக்கிறது மட்டும் தான் இவ வேலை என்று அம்மா மகளைக் குற்றஞ்சாட்டினார்.

இது மட்டுந்தான் என்று நினைக்காதீங்க. மரக்கறிகளை வாங்கி வெட்டக் கூட இந்த காலப் பிள்ளைகளுக்கு நேரமில்லை. வெட்டி வைச்சிருக்கிற மரக்கறிகளை தான் வாங்கீட்டு வாராங்க. அது எல்லாத்தையும் போட்டு சூடாக்கிட்டு சமைக்கிறம் என்கிறாங்க என்று பேத்தி மீதான குற்றச்சாட்டை பாட்டி மேலும் வலுப்படுத்தியதோடு இளம் தலைமுறையையும் குற்றஞ்சாட்டினார்.

எங்க ஜெனரேசன் லேடீஸ் எல்லாம் வேலைக்குப் போறதோட வீட்டையும் பாத்துக்கிறாங்க. உங்களை மாதிரி வீட்டில இருக்கலை. நீங்கெல்லாம் வீட்டை மட்டுமே பாத்திட்டு சமையலறையிலேயே வாழ்ந்திட்டீங்க. ஆனா நாங்க வேலைக்கு போய் உழைக்கிற தோட வீட்டையும் கவனிச்சுக்கிறம். எங்களுக்கு அந்த வசதி தேவை என்கிறதால தானே கடைகளில அப்படி விக்கிறாங்க. உங்க காலத்தில இருந்திருந்தா நீங்களும் வாங்கியிருப்பீங்க என தன் பக்க நியாயத்தை எடுத்துரைத்தார் பேத்தி.

ஏன் உங்க அம்மா வேலைக்கு போக லையா? அவ சமைக்கலையா? எங்க காலத்தில கூட வேலைக்குப் போன பொம்

பிளைங்க இருக்காங்க. அவங்கெல்லாம் எவ்வளவு நல்லா சமைப்பாங்க தெரியுமா? உங்களுக்கு புதுசு புதிசா கண்டு பிடிச்சு தந்து உங்களை சோம்பேறிகளாக்கிட்டாங்க என்று குற்றஞ்சாட்டிய பாட்டி இந்தக் கால பொண்ணுங்க என்னெல்லாம் கடையில வாங்கிறாங்க தெரியுமா? ரொட்டி, இடியப்பம் என்று மட்டுமில்ல நூடில்ஸுக்கு போட மரக்கறி, சம்பலுக்கு கரட் துருவல், கறிக்கு வெட்டின வாழைக்காய் சுண்டலுக்கெண்டு தூளா வெட்டின வல்லாரை எண்டு எல்லாமே கடையிலதான். பாட்டி அடுக்கிக்கொண்டே போனார்.

தேங்காய் பால்மா என்பன திடீர் சமையலுக்கென்று தயாராய் வருவது தெரியும். ரொட்டி, இடியப்பம் உடனடியா தயாரிக்கக் கூடிய வகையில் தயாராய் வருவதும் தெரியும். இதென்ன திடீர் சமையல் மரக்கறிகள்? ஆச்சரியமாய் பாட்டியிடம் கேட்டேன்.



இது கூட உனக்கு தெரியாதா? நீ எந்தக் காலத்தில் இருக்கிறாய்? என்று என ஏளனமாக் கேட்ட பாட்டி அதை விளக்கத் தொடங் கினார். மரக்கறிகள் எல்லாம் எந்தெந்த வகையான சமையலுக்குத் தேவையோ அதுக்கேற்ற மாதிரி வெட்டி அந்தந்த சமையலுக்குத் தேவையான பொருட்களோட சேர்த்து பக்கற் பண்ணி இருக்கும். அதை வாங்கிக் கொண்டு வந்து எல்லாத்தையும் கலந்து அந்த சாப்பாட்டுக்கேற்ற மாதிரி பக்குவப்படுத்திறது மட்டும் தான் இவங்க வேலை. இப்ப கரட் சம்பல் வேணும்னா அதுக்கு கரட் துருவி பச்சை மிளகா வெட்டி இருக்கும். அதை அளவா உப்புப் போட்டு வைச்சா இவங்க சமையல் முடிஞ்சிடும். இதுக்குத் தேவையான எலுமிச்சம் புளி கூட சாறா போத்தல்ல அடைச்சு விக்கிறாங்க. அது கூட புழிய முடியாதா அளவுக்கு இவங்களுக்கென்ன வேலை? என பாட்டி மறுபடி போர்க்கொடி தூக்கினார்.

நீங்க வேலைக்கு போயிருக்கலாம். ஆனா அலுப்பில்லாத வேலையா போயிருப்பீங்க. அநேமாக உங்க காலத்தில ரீச்சர் வேலைதான். அதுவும் பக்கத்தில எங்கையாவது தான் போயிருப்பீங்க. ஆனா வேலைக்கு போக நாங்க எவ்வளவு தூரம் போறம் தெரியுமா? ஒரு நாளாவது கிரவுட் பஸ்ஸில போனாத்தான் எங்க கஷ்டம் உங்களுக்குத் தெரியும். பிரச்சினை திசை மாறத் தொடங்கவும் அதை விடுத்து உடனடிச் சமையல் மரக்கறி



பற்றி யோசிக்கத் தொடங்கினேன். உண்மையிலேயே இது வேலைக்கு போகும் பெண்களுக்கு ஒரு பெரும் உதவி. ஆனால்.. இதனால் பாதிப்பேதும் உள்ளதா?

குடும்ப நண்பரான டாக்டரிடம் இது பற்றிக் கேட்டேன். இது வேலைக்கு போற பெண்களுக்கு பெரிய உதவி தான். ஆனால் இந்த மாதிரி வெட்டப்பட்ட மரக்கறிகளில் கலோரிப் பெறுமானம் குறையவும் விற்றமின்கள் அழியவும் வாய்ப்பிருக்கு. அதனால போதுமான போசாக்கு இல்லாம போகலாம். அதோட அது துப்பரவானதா என்கிறது முக்கியமானது. மாக்கெட்டுகளில அழுகின மரக்கறிகளில அந்த அழுகல் பக்கத்தை வெட்டிட்டு பாதி விலைக்கு விக்கிறாங்க. வியாபாரத்திற்காக அதை வாங்கி இந்த மாதிரி பொருட்களை தாயாரிச்சு விப்பாங்க. இது அந்த மாதிரியான மரக்கறிகளில செய்யப்படுறதில்ல என்கிறதை உறுதி செய்துக்கனும் என்றார்.

அப்படி என்றால் போசனை மட்டுந்தான் இதிலிருக்கிற பிரச்சினை. ஆனாலும் காலத்தின் வேகத்திற்கேற்ற மாதிரி போசனையை தரக்கூடிய வழியும் கண்டுபிடிக்கப்படலாம். அதற்கு பாவிக்கப்படும் இரசாயனங்களால் பாதிப்பேற்படலாம். அது நாளைய பிரச்சினை. ஆனால் இப்போதைக்கு வேலைக்குப் போகும் அவசரத்திலும் சமையலறையில் அல்லாடும் பெண்களுக்கு ஒரு சின்ன ஆறுதல் தான்.

# வாடகை வீடு

இரண்டு வருடங்கள் எப்படியோ கடந்து விட்டன. இப்போ மீண்டும் வீடு தேடும் வேலை. கொழும்பிலே வாடகைக்கு வீடு தேடுவது என்பது இலகுவான விடயமல்ல. கடந்த ஒன்றரை மாதமாக வீடு தேடி அலை கின்றேன். வார இறுதி நாட்களை வாடகை வீடு தேடுவதற்கென்றே ஒதுக்கினேன். ஆனால் முடிய வில்லை. இயலாது என சும்மா இருக் கவும் இயலவில்லை. முயற்சியில் தீவிரமாக இறங்கினேன். வேலை க்கு செல்லாது லீவு எடுத்து வாடகை க்கு வீடு தேடுவதில் ஈடுபட்டேன்.

"நாலு பணத்திற்கு குதிரையும் வேணும் ஆறு கடக்க பாயவும் வேணும்" என்னைப் போன்றவர் களால் வேறு என்ன செய்ய முடியும்? எடுக்கும் சம்பளத்தில் முக்கா வாசி வீட்டு வாடகைக்குச் செலவாகிறது. இரண்டு வருடங்களுக்கு முன்பு வங்கியில் எடுத்த கடன் முழுமை யாக முடியவில்லை. ஆனால் வாட கைக் குடியிருப்பின் காலம் முடிவ டையப் போகிறது. இன்னுமொரு வீட்டுக்குப் போவதானால் ஒன்றோ இரண்டு வருடங்களுக்கு முற்பணம் செலுத்த வேண்டும். வாடகை ஒரு வாறு செலுத்தி விடலாம். முற் பணம் செலுத்துவது என்பது இலே சான விடயமல்ல.

வாடகைக்கு வீடு தேடும் ஒருவர் என்ன செய்ய வேண்டுமோ






அதை நானும் செய்தேன். ஞாயிறு பத்திரிகைகளில் வரும் விளம்பரங்களையும் பார்த்தேன். கடைசியில் காசு கொடுத்து பத்திரிகைகள் வாங்கிப் படிக்கும் பழக்கம் எனக்கில்லை. நான் அந்தப் பழக்கத்தைக் கைவிட்டு பல ஆண்டுகள் ஆகிவிட்டன. செலவுகளைப் கட்டுப்படுத்துவதென்றால் இப்படி எதையாவது செய்ய வேண்டியிருக்கிறது.

கடந்த ஒன்றரை மாத காலமாக ஞாயிறு பத்திரிகைகளை வாங்குகிறேன். விளம்பரங்களைப் பார்த்து விட்டு தொலைபேசியில் தொடர்பு கொண்டால் ஏமாற்றமே மிஞ்சும். அவர்கள் கூறும் மாத வாடகை அதிகமாக இருக்கும். அதை விட அதிகமாக முற்பணம் கேட்பார்கள். சில வேளை நம்பிக்கை தரும் வார்த்தைகளையும் செவிமடுக்க முடியும்.

“வாருங்கோ வந்து வீட்டைப் பாருங்கோ குறைக்க முடிந்தால் குறைக்கிறோம்” இப்படி தொலைபேசியின் மறுமுனையில் இருந்து வார்த்தைகள் வரும். தேன் வந்து பாய்வது போல் இல்லாவிட்டாலும் நம்பிக்கை தருவதாக இருக் கும். குறித்த முகவரிக்கு சென்று வீட்டைப் பார்க்கையில் அந்த நம்பி க்கை அகன்று விடும்.

மால் போன்று உள்ள இடத்தை கோல் எனச் சொல்வர். அடுத்து புறாக்கூண்டு போன்றதொன்றை படுக்கையறை என்பர். பகல் வேளைகளில் கூட அந்த அறைக்குள் செல்ல வேண்டுமானால் மின் குமிழை எரிய விட வேண்டியிருக்கும். படுக்கையறைதானே. வேலை முடிந்து வந்து ஒதுங்குவதற்கு ஓர்



இடம் அதற்கு இது போதும். அடுத்து அடுக்களை, குளியலறை, மலசலகூடம் என அனைத்திலும் பல குறைகள். போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து என்பதாக நினைக்கவேண்டும். அந்த நினைவோடு வீட்டுக்காரரின் முகத்தை நோக்கினால் "யாழ்ப்பாணத்து ஆட்களுக்கு நாங்கள் வீடு கொடுப்பதில்லை" என முதலில் பிகு பண்ணுவார்கள்.

"அப்ப நாங்கள் போயிட்டு வந்றோம்" என விடை பெற்றால் அந்த வேளையில் சற்று இரக்கம் காட்டுவது போன்று பேசுவார்கள்.

"உங்களைப் பார்த்தால் பாவமாக இருக்கு" அட்வான்ஸ் இவ்வளவு, வாடகை இவ்வளவு எனத் தலையில் பாறாங்கற்களாக தூக்கிப் போடுவார்கள். பத்திரிகையில் வரும்

விளம்பரங்களைப் பார்த்து வாடகைக்கு வீடு எடுப்பது சரிப்பட்டு வராது என எண்ணினேன். இப்படி எண்ணுவதற்கு காரணங்கள் இருந்தன. காலையில் பத்திரிகை படித்து விட்டு தாமதியாது குறித்த முகவரிக்கு செல்ல வேண்டும். தனியார் பேருந்துகளில் ஏறினால் தாமதம் தவிர்க்க முடியாது. அரச பேருந்துகள் கை காட்டினாலும் நிற்பதில்லை. எப்படியோ முகவரியை சென்று அடைந்து விட்டாலும் சற்று ஆறுதலாக இருக்கும். அந்த ஆறுதல் கூட பல சந்தர்ப்பங்களில் நீடிப்பதில்லை.

"இப்பதான் ஒருவர் அட்வான்ஸ் கொண்டு வந்து தந்து விட்டு போறார்" என்பார்கள். அப்படி ஏதும் பதில் வராவிட்டால் சற்று அதிர்ஷ்டம் என நினைக்கலாம். ஆனால் வீட்டுக்காரன் கூறும் முற்பணம் வாடகை என்பன அதிஷ்டமில்லாதவன் என்பதை மீண்டும் உணர்த்துவதாக இருக்கும்.

எதையும் பேரம் பேசி வாங்கும் காலம் இன்றில்லை. கேட்டதற்கும் மேலாக கொடுப்பதே இன்றைய நடைமுறை. இது எம்மவர்கள் விடயத்தில் மிகப் பொருந்தும். யாழ்ப்பாணத்தவர்கள் எல்லோரும் வெளிநாட்டுப் பணத்தில் தான் வாழ்கிறார்கள். இப்பிடித்தான் இங்குள்ளவர்கள் நினைக்கிறார்கள். பேரம் பேசி வாடகைக்கு வீடு எடுப்பது சரிவராது என நினைத்து தரகர்களை நாடினேன். அங்கொன்றும் இங்கொன்றுமாக சில வீடுளைக் காட்டினார்கள். வாடகை எவ்வளவோ அவ்வளவு தரகுப்பணமாக தரவேண்டும் என்றார்கள். ஓம் எனத் தலையாட்டினார்கள்.

பஸ்ஸிலே சென்று வீடு பார்ப்பது கடினம். எனவே ஓட்டோவில் போவோம் என்பார்கள். அரைவாசி நனைந்தவன் கூதலுக்கு அஞ்ச முடியுமா? அதற்கும் ஓம் என்றேன். வீடுகள் பார்த்ததை விடவும் தேனீர் கடைகளுக்கு சென்றது அதிகம். ஓட்டோ கட்டணம், தேநீர், சிற்றுண்டி என அனைத்துக்கும் செலவழிக்கிறேன். எப்படியும் தரகர்கள் வாடகைக்கு வீடு பார்த்து தந்து விடுவார்கள். யானையின் பலம் தும்பிக்கையில் எனது பலமோ நம்பிக்கையில். தரகர்கள் வீடுகளை காட்டுகிறார்கள். எல்லாமே யானைவிலை, குதிரை விலை "நீங்கள் கூறும் வாடகைக்கு கொழும்பில் வீடு எடுக்கேலாது" புரோக்கர் மார் புறுபுறுக்கினம். வாடகை கூடவாக இருந்தால் தானே அவர்களுக்கு தரகுப்பணம் கூடவாகக் கிடைக்கும்.

"புரோக்கர்மாருக்கு தேத்தண்ணி, வடை வாங்கிக் கொடுத்தால் தான் அவங்களும் ஓடியாடிப் பார்த்து தருவார்கள்"

வெளிநாட்டுப் பணத்தில் வாழும் என் நண்பர் எனக்கு உபதேசம் செய்தார். இன்னும் கொஞ்சம் எழுதினால் இதை வாசிக்கிற நீங்களும் எனக்கு உபதேசம் செய்ய வந்திடுவியள்.

அதாலே இத்தோட முடிக்கிறன்.

முருகேசு ரவீந்திரன்

# வேலைக்காரி

அக்ஷயா





**மனுசங்க** சொல்றதைக் கேட்டு செய்யப் பழகிப் பழகியே இப்போ கையும் ஓடாம காலும் ஓடாம நிக்கறேன். பெத்த மகளோட சாவீட்டைப் பாக்கறதா அழுவுற கொழந்தைங்களப் பாக்கெறதா பொலீஸுக்குப் பதிலு சொல்லிட்டுக் கெடக்கிறதா? இவ்ளோ காலத்தில நா எவ்வளவோ தாங்கியிருக்கேன். ஆறு வயசுல என்ன வேலைக்காரியா ஒரு வீட்டில அம்மா கொண்டு விடும்போ அழுதேனா? மாசாமாசம் டாணெண்ணு சம்பளப்பாக்கி மட்டும் எடுக்க வந்திரும். அம்மா என்ன உன்கூடக் கூட்டிப்போம்மான்னு ஒரு வார்த்தை கேட்டிருப்பனா? என்னோட கண்ணுல இருந்த கெஞ்சலைப் பாத்தும் பாக்காமலும் அம்மா வெளியில நடந்து போக என்னதா செய்தேன்? எங்கப்பா இருந்திருந்தா எவ்ளோ நல்லாயிருக்குமேன்னு எனக்குள்ளதா அழுதுட்டுக் கெடப்பேன்.

அப்பா அழகா சந்தணப் பொட்ட வைச்சுக் கிட்டு ம்ருதங்கோம் வாசிச்சிட்டு இருப்பாரு. வள்ளிக்குட்டி வள்ளிக்குட்டின்னு என்னையத் தூக்கித் தூக்கிப் போடுவாரு. அப்பப்போ எங்க ளோட சொந்தக்காரங்க பாலக்காட்டிலயிருந்து வந்தா அவங்ககூட கொழும்பெல்லாம் சுத்தும் போது என்னைய மறக்காம அழைச்சிட்டுப்போவாரு. வளையலு தும்பு மிட்டாசியெல்லாம் வாங்கித் தருவாரு. இப்பிடித்தான் ஒரு தடவ வாயில மிட்டாசி கரைஞ்சு போறதை அப்பிடியே முழுங்கிக் கொண்டு நா நிக்க முன்னால மொகத்தைச் சுளிச்சு நெஞ்சில கையை வச்சு அப்பிடியே ரோட்டில ஒக்காந்தாரு. அம்மா ஓடியாந்து அவரக் கூட்டிக்கிட்டு ஆசப்பத்திரிக்கு கொண்டு போச்சு. அப்புறமா சேலைத் தலைப்பை வாய்க்குள்ள ஒட்டிட்டு வீட்டுக்கு வந்திச்சு. அப்பா சாமிகிட்ட போயிட்டாரின்னு சொன்னா. என்னைய தூக்கி பம்பரம் விட அப்பா வரமாட்டாரான்னு கேட்டுக்கிட்டே இருந்தேன். ஆனா இது என்னோட வாழ்க்கையையே மாத்திடப் போகுதுன்னு சத்தியமா நா அப்ப நெனக்கல்ல. அப்பகூட நா அழல்லை பாருங்க.



அப்புறம் என்னன்னமோ நடந்திச்சு. சொந்தக்காரவுங்க நெறையப் பேர் பாலக்காட்டிலயிருந்து வந்தாங்க. என்னக் கட்டிகிட்டு அழுதாங்க. போயிட்டாங்க. அம்மா என்ன ஸ்கூல்லயிருந்து நிறுத்திருச்சு. அப்புறமா அம்மா வீட்டில அங்கையும் இங்கையுமா குந்திக்கினு இருந்துது. பெறகு என்ன அந்த வீட்டில கொண்டாந்து விட்டுது.

பெறகென்ன. மாறி மாறி ஏதாவது ஒரு வீடுதா. நல்ல வீடும் இருக்கும் கெட்ட வீடும் இருக்கும். மொதல்ல ரொம்ப மனசு பாதிச்சுது. போகப் போக இதெல்லாம் விதின்னு தெரிஞ்சுது. அத யாராலுமே ஒண்ணும் செய்ய முடியாது. நல்ல அம்மான்னா நல்லவதா கெட்ட அம்மான்னா கெட்டவதா. வேலை செஞ்சு செஞ்சே கையி சொரசொரப்பா மாறிடுச்சு. சரி தோட்டக்காரனு இவளுக்குத் தோதாயிருக்குமேன்னு கண்ணாலம் செஞ்சி வைச்சாங்க என்னோட ஜாவத்தை வீட்டுக்காரம்மா. சின்னதா ஒரு தாலி செஞ்சு அம்மா தந்தாங்க. பட்டுச் சேலை அதயும் உடுத்திக்கின்னு கோயிலுக்குப் போய் செஞ்ச கண்ணாலம் இன்னிக்கும் கண்ணுக்குள்ளயே கெடக்குது. அம்மாவோட நல்ல மனசு. ஆனா ஆம்பளை அப்பிடியில்லியே. ஒண்ணா இருக்க ஆரம்பிச்சதும்தா முழு வெளையாட்டும் தெரியும். சரி ஏதோ மாசத்துக்கு ரெண்டு மூணு தடவதானே குடிச்சிட்டு வந்து ரகளை பண்ணுராரின்னுப் பொறுத்துக்கிட்டேன். ஒழைப்பும் அவ்வளவா இல்ல. ஒழைக்கறதையும் குடிச்சு காட்ஸ் அடிச்சுத் தீர்த்துப்புடறது. என்ன செய்ய கட்டின புருசனாச்சேன்னு ஒழைச்சிக்கிட்டுக் கெடந்தேன். அப்பகூட நாலு பிள்ளைங்களைக் குடுத்திட்டு மனுசன் போயிடுவான்னு யாரு கண்டது? சீக்கா கெடந்தாரு மருந்து செஞ்சோம். ஒண்ணுமே பலிக்கல. போயிட்

அவருக்குப் பத்து மகன்களாமே ?

ஆமா...

அதான் எப்பவும் டென்-சனோடு இருக்காரா ?





டாரு. கசிப்பு சாராயம் குடிச்சு குடிச்சுத்தான் வயிறு இந்த மாதிரி போச்சுன்னு டாக்டரவங்க எல்லாம் சொன்னாங்க. இப்பிடி மனுசன் குடும்பத்துக்கும் உதவாம வீணாப் போனானேன்னு நா அழுதனா? இல்லியே. வேலைக்காரியாவே வாநா முழுக்க கட்டாயம் பண்ணி இருக்க வச்சிட்டியேன்னு சாமிய வைதேனா? இல்லியே. ஏதோ புள்ளைங்க தலையெடுத்து அதுங்களுக்கு கண்ணாலம் கட்டி முடிக்கவாவது சாமி எனக்குத் தெம்பைக் குடுத்தாரின்னு நா எவ்வளவு சந்தோசமா இருந்தே.


ஆனா இப்ப? தாங்க முடியலியே. வசந்திக்கு ஜலதோஷம் மூக்கால ஓடுது. என்னோட மூக்கைச் சீறுறதா அவளத் தொடச்சி விடறதான்னு ஒண்ணுமே தெரியல்ல. அத இடுப்பில தூக்கியாந்துக்கிட்டு செத்த வீட்டு வேலையெல்லாத்தையும் பாக்கெறன். கண்ணுக்குக் கண்ணா வளத்தனே ஏ மக. இன்னிக்குப் பெட்டியில இருக்கிறா. ஏதாவது வருத்தம் வந்த செத்திருந்தாலும் மனசைத் தேத்திக்கிட்டிருப்பே. இப்பிடி அநியாயமாச் செத்தாளே. ஒண்ணு மூணு அஞ்சின்னு பசங்களை அநாதையா விட்டுட்டுப் போனாளே.

சரவணன இன்னும் காணல்ல. மொகத்துவார ஐயரக் கூட்டிக்கிட்டு நேரத்தோட வான்னு படிச்சுப் படிச்சு சொன்ன. அவனு வரமாட்டான். வந்து கலந்துக்கிட்டா தங்கச்சியோட புள்ளைங்களைப் பாத்துப்பியான்னு நா கேட்டிடுவனோன்னு நெனச்சானாக்கும். யாரு கண்டது? பொண்டாட்டி நாலு விசயம் சொல்லிக் குடுத்திருப்பா. அவ சூரி. நெலமை தெரியும். குடும்பத்தில ஒரே ஆம்பளைப் பிள்ளை. அவன் தலையில பொறுப்பு வரத்தா போகுதுன்னு முன்னாடியே யோசிச்சிருப்பா. இதுவும் விதியா சாமி?




ஜெயில்ல இருந்து வந்த மறுநாளே உன்னை மறுபடியும் உள்ளே தள்ளிட்டாங்களே ஏன் ?

கைதி டிரஸ்ஸைத் திருடிட்டு வந்துட்டேன்




சாமி ஏஞ்சாமி என்ன இப்பிடி சோதிக்கிறே?

ஆட்டோக்காரன் நல்லா ஒழைப்பா மவள கண்ணு கலங்காப் பாத்தப் பான்னுதான் கட்டிவச்சேன். தனக்கு குப்பை லாரி ஓட்டறவனைக் கட்டிக் குடுத்திட்டு தங்கச்சிக்கு மட்டும் ஆட்டோக்காரன் கெடைச்சானான்னு அன்னிக்கு மூத்த மக போட்ட ரகளை. அவள சமாதானப்படுத்த அவளோட புருசனுக்கு தங்க மோதிர மொண்ணும் செஞ்சு போட்டே. செண்பகத்தோட கல்யாணச் செலவு அவ மாப்பிள்ளைக்கு ரிஸ்ட் வாச்சு அது இதுன்னு குடுத்த சீதனம் இந்த செலவெல்லாஞ்சேந்து ரொம்பப் படுத்திட்டுது. அந்தக் கடனெல்லாத்தையும் குடுக்கவே நாலு வருசமாச்சுது. இதெல்லாம் இப்பிடி வந்து முடியுமுன்னு நாகனவிலயும் நெனக்கல்லே.



எத்தனையோ தடவ செண்பகம் என்னோட வீட்டுக்கு ஓடியாந்திருக்கா. ஒருக்கா மூத்ததை வீட்டில விட்டுப்போட்டும் வந்திருச்சு. நல்லாத் திட்டினே. பச்சப் புள்ளய தாய் போனா எவன் கவனிப்பான்? நாம்ப எங்க புருசன்மாரோட இருக்கல்லியா? சமைச்சுக் கொட்டலையா? ஊரு ஒலகத்தில இல்லாத பெரச்சனையா இது? ஆம்பளைங்க குடிச்சாக் கொஞ்சம் ரகளை



பண்ணு வாங்கதா. வணாத்தமுல்ல யிலயி ருந்து பஸ் எடுத்து எங்கூருக்கு தெஹி வளைப் பாலத்துக்குப் பக்கத் தால வர்றத்துக்கு கொறைஞ்சது இருவத் தியஞ்சு ரூவா ஆகுமே. ஒவ் வொருக் காவும் புருசன் அடிக்கெ றான் புருசன் அடிக்கெறான்னு ஓடி யார முடி யுமா? ஏதோ முடிஞ்ச வரைக்கும் சொல்லிப் பாத்துட் டேன். தம்பி அவள அடிக்க வேணா ன்னு அவங்கிட்டயும் சொன்னேந் தான். இனி அடிக்க மாட்டேன்னு சத் தியம் பண்ணுனான். ஆனா நடக் கல்லே.

அன்னிக்கும் மூத்தவ சரசுவோட மக பெரிய பிள்ளையாகி தண்ணி வாக் கப் போறாங்க. மொதநா அவுங்க வீட்டுப் பலகாரமெல்லாம் செய்ய ஒத்தாசை பண்ணிக்கிட்டு வந்தே. அவளுக்கு செண்பகம் உதவிக்கு வரல்லேன்னு கொறை. அவளு வழ க்கம்போல புருசனோட சண்டை பிடிச்சாளாம்ன்னு சரவணன் சொன் னான். என்ன சண்டை அவ ஒளிச்சு வைச்ச காசை இவ எடுத்திருப்பா. இல்ல அவ ஏன் அத வாங்கினா இத வாங்கினான்னு பெரச்சனை கெளப் பியிருப்பான். நாங்க கெளம்பும் வரைக்கும் அந்த வீட்டுக்காரவுங்க வரல்ல. அடுத்தநா காலையில ஆயத் தம் பண்ணிக்குன்னு மக வீட்டுக்கு கெளம்பினே. சுருக்கா போயிட வேணுமேன்னு எட்டி வைக்க ஆரம் பிச்சதுதான் ஆயா போன் கோல் ன்னு எதித்த வீட்டு சோமு ஓடி வந் தான். எந்த வீட்டுக்கார அம்மா கூப் பிட்டிருப்பாங்கன்னுதா யோச னையோட போனேன். ஆனா தலை யில பாறாங்கல்லைப் போட்ட மாதிரி செண்பகத்தை அவ புருசன் கொன்ன செய்திதான் கெடைச்சுது. கேஸூ பொலீஸூக்கும் போகாம விடுமா? மக புள்ளைங்களுக்கு காலம சாப்பாடு குடுக்க பாணு வெட்டிக்கிட்டு இருக்க அந்தக் கத்தி யைய எடுத்து அவளக்குத்திக் கொன் னுட்டான் படுபாவிப்பய. அடுத்த வீட்டுக்காரங்க எல்லாம் சாட்சி சொன்னாங்க. அவன ஆயுளுக்கும் அடச்சுடுவாங்கன்னு சொன்னாங்க. அவன் போனா இந்தப் பச்சப் பிள் ளைங்கள யாரு பாக்கிறது. நானு என்னோட வாழ்நாள் முழுக்க ஒழைச்சுப் போட்டிட்டேன். இனி மூணு பிள்ளைங்கள யாரை நம்பி பொறுப்பெடுப்பே. சண்டாளப்பய எம் பேரன் பேத்திங்களுக்கு தகப் பனாயும் இருக்கறானே. ஒரு



முடிவோடதா நா பொலிஸு விசா ரணைக்குப் போறேன். உங்க மரும கன் அடிக்கடி சண்டை போடு வாரா? உங்க மகளை அடிப்பாரா? அங்க கேக்கிறாங்க. வழக்கமா புரு சன் பொஞ்சாதிக்குள்ள வர்ற சண் டைதாங்க. மருமகனில குத்தமில்லீ ங்க. எம்மவதா கள்ளப்புருசன் வைச் சிருந்தா. இத எந்த ஆம்பளைதாங்க தாங்குவா..? ன்னு சொல்றே. அவு ங்க எல்லாரும் விளங்கினதா தலய ஆட்டிக்கிராங்க. பொம்பளை தவ றினா இந்த ஒலகம் பொறுக்குமா? நீங்க எனை இவ ஒரு தாயா ராட் சசின்னுதா திட்டுவீங்க. சொல்லுறத சொல்லுங்க. செண்பகம் பிள் ளைங்களுக்கு நல்லதத்தா நா செஞ்சே. அவ உசிராட இருந்தாலும் நா செஞ்சதை ஆமோதிச்சிருப்பா. என்னதான்னின்னாலும் பொள்ளை ங்களுக்கு தகப்பேனில்லையா? ஆத் திரத்தில திடீர்னு நடந்த கொலை ன்னு கேஸ் போட்டாங்க. தவிர்க்க முடியாததுன்னும் லோயர் சொல் லிட்டு இருந்ததைக் காதால கேட் டேன். நல்லவேளை ஆயுசு கெடைக் கல்லை அவன ரெண்டு வருசம் மட் டுந்தா உள்ளுக்குப் போட்டாங்க. இனி அவனு வரும் வரைக்கும் ஏதோ ஒழைச்சு கஞ் சியோ கூழோ குடுத்து புள்ளைங்கள வளக்கவேண் டியது எம் பொறுப்பு. அவுங்கப்பா வந்தோடன அவங்கிட்ட கவனமா பொறுப்பு குடுப்பேன் . ஆமா.

## பேரப்பிள்ளைகள் கொடுமைப்படுத்தப்படுவதைப் பார்த்து ஆற்றாமல் பாட்டி தற்கொலை

(கொழும்பு நிருபர்)

வெள்ளவத்தை விகாரை லேனில் வசித்துவந்த வள்ளிப்பிள்ளை கணபதி என்னும் 57 வயதுப் பெண்மணி நேற்று முன்தினம் விஷமருந்தி தற்கொலை செய்து கொண்டார். அவருடைய மகள் இரண்டரை வருடங்களுக்கு முன்பு ஒரு குடும்பத் தகராறின்போது தனது கணவனால் கொலை செய்யப்பட்டது குறிப்பிடத்தக்கது. சிறை சென்று வந்த மருமகன் இன்னொரு திருமணம் முடித்துக் கொண்டார். அவருடைய இரண்டாம் மனைவி இவரது முதல் தாரத்துப் பிள்ளைகளைத் துன்புறுத்தி வளர்த்ததைப் பார்த்து வள்ளிப்பிள்ளை விரக்தியடைந்திருக்கிறார். தனது பேரப்பிள்ளை களின் பரிதாப நிலை கண்டு சோகமாகியே அவர் தன் உயிரை மாய்த்திருக்க வேண்டும் என்று அவர் பிள்ளைகள் எங்கள் நிருபருக்குத் தெரிவித்தனர்.

# ! ! கமலா மாமி வரப் போறா ! !



- அதார் கமலா மாமி ?
- கமலா மாமியைத் தெரியாதே எல்லா விஷயமும் தெரிஞ்ச ஆளெல்லே அவ.
- அப்பிடியே சங்கதி. அவ எங்க வாறா?
- சூரியன் fm இலை எல்லே வாறா.
- எப்ப வாறா?
- August 25 ஆம் திகதி துவக்கம் திங்கள் முதல் சனி வரை 6 நாட்களும் இரவு 9.30 மணிக்கெல்லே வரப்போறா.
- நான் எண்டால் உதை மிஸ் பண்ணவே மாட்டன்.



**இருக்கிறம்** காத்திருப்பு 2 இருக்கை 7

ஒரு பொல்லாப்பும் இல்லை — மாதம் இருமுறை

ஈகோ பப்ளிசிங் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டட்டால் வெளியிடப்படுகிறது.

ஆசிரியர்
இளையதம்பி தயானந்தா
நிர்வாக ஆசிரியர்
சாந்தி சச்சிதானந்தம்
உதவி ஆசிரியர்
ம. ஸ்கந்தரூபன்
ஆசிரியர் குழு
எஸ். ரஞ்சகுமார்
அப்துர் ரஹ்மான்

கௌரவ ஓவியர் ஆசை இராசையா
ஓவியர் சஞ்ஜீத்
வடிவமைப்பு க. மயூரன், முஜீன், க. பிரணவன், சோ. விபுலன்
கணிணித் தட்டச்சு பா. கரன், சதிஸ்
தொடர்பு
3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07.
தொலைபேசி: +94 60 2150836 +94 11 2506272
தொலைநகல் +94 11 2585190
மின்னஞ்சல் irukkiram@gmail.com
கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே.
இதழில் வரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல

# தேடிப் பகிர்தல்

## கரட், முட்டை, தேயிலை, இவற்றில் நீங்கள் எந்த ரகம்?

**வாழ்க்கை** தனக்கு கடுமையாக இருக்கிறது என்று ஒரு இளம் பெண் தன்னுடைய தாயிடம் முறையிட்டுக் கொண்டாள். தன்னை பாதிக்கும் விடயங்களை எப்படி சரி செய்வது என்று அவளுக்குத் தெரியவில்லை. தனக்கு பிரச்சினை மேல் பிரச்சினையாக வருகின்றது. எல்லாம் தன் கைமீறிப் போய்விட்டன என்ற நிலைக்கு அவள் வந்து விட்டாள். ஒரு பிரச்சினையை முழுமையாகத் தீர்த்ததும் இன்னொரு பிரச்சினை தயாராகக் காத்திருப்பது போல அவளுக்குத் தோன்றியது.

தன்னிடம் ஆலோசனை கேட்டு வந்த தன் மகளை அந்தத் தாய் சமையல் அறைக்குள் கூட்டிச் சென்றாள். உள்ளே நுழைந்ததும் ஒரு பாத்திரத்தில் கரட்டுகளையும் இரண்டாவது பாத்திரத்தில் முட்டைகளையும் இன்னொரு பாத்திரத்தில் தேயிலைத் தூளையும் போட்டு தண்ணீர் ஊற்றி அடுப்பில் வைத்து தனித் தனியாகக் கொதிக்க வைத்தாள். எந்த வார்த்தையும் பேசாமல் மகளுடன் சேர்ந்து






அங்கேயே உட்கார்ந்து கொண்டாள்.

சிறிது நேரத்திற்கு பின்னர் அடுப்பை அணைத்து விட்டு முதலாவது பாத்திரத்தில் இருந்து கரட்டுகளை எடுத்து ஒரு கிண்ணத்தில் வைத்தாள். இரண்டாவது பாத்திரத்தில் இருந்த முட்டைகளை எடுத்து இன்னொரு கிண்ணத்தில் வைத்தாள். மூன்றாவது பாத்திரத்தில் இருந்த தேநீரை வேறொரு கிண்ணத்தில் ஊற்றினாள். தன் மகளைப் பார்த்து இங்கு என்ன இருக்கிறது என்று கேட்டாள்.

கரட்டுகள், முட்டைகள், தேநீர் என்று மகள் பதில் சொன்னாள்.

மகளை தனக்கு இன்னும் நெருக்கமாக வரச் சொல்லி கரட்டுக்களைத் தொட்டுப் பார்த்து உணரும்படி சொன்னாள். அம்மா சொன்னபடி செய்த மகள் அவை மென்மையாக இருப்பதைத் தெரிந்து கொண்டாள். அடுத்து முட்டையை எடுத்து உடைக்கச் சொன்னாள் அம்மா. முட்டையின் மேல் ஓட்டை அகற்றிய பிறகு வெந்திருந்த முட்டை கடினமாக இருந்ததைக் கவனித்தாள். கடைசியில் அம்மா தேநீரை சுவைக்கச் சொன்னாள். புன்னகைத்தவாறே அபாரமான சுவை கொண்ட அந்த தேநீரை ருசித்த மகள் இதிலென்னமா இருக்கு? என்றாள். அந்தத் தாய் விளக்கம் சொன்னாள்.

இந்த மூன்று பொருள்களுமே ஒரே மாதிரியான பாதிப்புக்கு ஆளாகின. அதாவது கொதித்துக் கொண்டிருந்த தண்ணீருக்குள் குறிப்பிட்ட நேரம் இருக்க





வேண்டியிருந்தன. ஆனால் இவை ஒவ்வொன்றும் அது தொடர்பில் வெவ்வேறுபட்ட எதிர்வினையினை களை வெளிப்படுத்தின. உறுதியாக இருந்த கரட் கொதி நீரில் வெந்ததுமே மென்மையாகவும் பலவீனமாகவும் மாறிவிட்டது. உடைத்தால் சிதறி ஓடி விடக் கூடிய முட்டை கொதிநீரில் போடப்பட்டதும் கெட்டியாகி விட்டது. ஆனால் தேயிலை ஒரு தனித் தன்மையான எதிர் வினையை உண்டாக்கியது. அதாவது கொதிக்கின்ற தண்ணீரில் போடப் பட்டதும் அது அந்தத் தண்ணீரின் தன்மையே மாற்றிவிட்டது.



இந்த மூன்றில் நீ யார்? உனக்கு ஒரு பாதிப்பு ஏற்படும் போது நீ எப்படி நடந்து கொள்வாய்? ஒரு கரட்டைப் போலவா? அல்லது ஒரு முட்டையைப் போலவா? இல்லாவிடில் தேயிலைத் தூளைப் போலவா? என்று கேட்ட அந்தத் தாய் நான் எதுவாக இருக்கிறேன் என்று ஒவ்வொருவரும் நினைத்துப் பார்ப்பதுடன் தங்களை தேயிலை போல் மாற்றிக் கொள்ள வேண்டும் என்றாள்.



சிலர் சாதாரணமாக கரட்டினைப் போன்றவர்கள். பார்ப்பதற்கு உறுதியாக இருப்பது போன்று தெரியும் ஆனால் துயரமும் பாதிப்பும் வரும் போது பலவீனப்பட்டு தம் வலிமையை இழந்து விடுவார்கள்? வேறு

சிலர் பார்க்கும் போது இலகுவில் உடைந்து விடக்கூடியவர்கள் போன்று மென்மையானவர்களாகத் தெரிவர். ஆனால் பாதிப்புகளுக்குள்ளாகும் போது அவர்கள் நிஜத்தினைப் புரிந்து கொண்டு தங்களை உறுதிப்படுத்திக் கொண்டு விடுவார்கள். வேறு சிலர் தேயிலைத் தூளைப் போன்று தம்மைப் பாதிக்கும் விடயத்தினையே தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டு தங்களின் நிலையினை மேலும் முன்னேற்றிக் கொள்வார்கள். தேயிலை கொதிக்கிற தண்ணீரை அதாவது வேதனையைத் தருகிற விடயத்தையே தனக்குச் சாதகமாக மாற்றி தனது நறு மணத்தையும் சுவையையும் வெளிப்படுத்துகிறது. நீங்கள் இதில் எந்த ரகம்? கரட்டா? முட்டையா? அல்லது தேயிலையா? கரட்டோ அல்லது முட்டையோ என்ன பாடுபட்டாலும் தேயிலையின் குணத்தினைப் பெறமுடியாது. ஆனால் நாங்கள் மனிதர்கள் தற்போது என்ன தன்மையினைக் கொண்டவர்களாக இருப்பினும் தேயிலையின் தன்மை கொண்டவர்களாக மாறிக்கொள்ள முடியும். தேயிலையினைப் போன்று எப்படிப்பட்ட மோசமான பாதகமான பாதிப்புக்கு ஆளாகினாலும் அதனை புத்திசாலித்தனமாக அணுகி நம்மைச் சூழ்ந்திருக்கும் சந்தர்ப்ப சூழ்நிலைகளையே நமக்குச் சாதகமாக மாற்றியமைக்கப் பழகிக்கொள்வோம்.



வாழ்க்கையில் வெற்றி பெறுவது என்பது வாழ்க்கையில் நடப்பவற்றினை நாம் எவ்வாறு எதிர்கொள்கிறோம் என்பதனைப் பொறுத்தே அமைகின்றது.

**என். சிறிரஞ்சன்**







# நடிகைகளும் நிகழ்ச்சிகளும்

**நடிகைகளும்** சினிமாவும் என்பதிற்கு பதிலாக என்னயிது நடிகைகளும் நிகழ்ச்சிகளும் என்று தலைப்பிடப்பட்டுள்ளது என்று நீங்கள் நினைக்கலாம். விடயம் இருக்கிறது. அதுதான் அண்மைக்காலமாக இந்திய தமிழ் சினிமா நடிகைகள் நிகழ்ச்சிகளில் அரை குறை ஆடையுடன் தோன்றுவதும் பின்னர் அது பிரளயம் ஆவதும்

சினிமா என்பது ஒரு பொழுது போக்கு சாதனம். அது மக்களை மகிழ்வூட்டுவற்காகவும் கிளர்ச்சியூட்டுவதற்காகவும் பல உத்திகளை கையாளும், அதுவும் இளைய தலை




அவர்கள் நடித்து விட்டு போகட்டும். அதற் காக அவர்கள் அதே பாணியில் நிகழ்ச்சிகளில் காணப்படுவது முறை யல்ல.

சில வேளை தங்களை மற்ற வர்களிடம் இருந்து பிரித்து வேறாக அடையாளம் காண்பதற்கு தான் இந்த விளையாட்டோ தெரியாது. ஏனெனில் சாதாரணமாக தோன் றும் போது அவர்களும் மற்றப் பெண்களைப் போல காணப் படுவதால் அதற்கு ஒரு வித்தி யாசம் கொடுக்க வேண்டு மென்றோ?

என்னயிருந்தாலும் இது இதற்கென்று சில கட்டுப் பாடுகள், வரையறைகள்



முறையை வளைத்துப் போட ஆடை க்குறைப்பு உத்திகளை இன்னும் சிறப்பாக கையாளும்.

சரி நடிகைகள் திரைப்படங்களில் அரை குறை ஆடையுடன் தோன் றுவர். ஆனால் அதே நடிகைகள் பொது நிகழ்ச்சிகளிலும் அவ்வாறு தோன்ற வேண்டும் என்று அடம் பிடிப்பது சற்றும் சரியில்லை.

நீச்சல் வீராங்கனை, தான் நீச்சல் உடையில் தான் நடமாடுவேன் என்று சொல்லலாமா இல்லையல் லவா அதே போன்று தான் நடிகை களும் திரைப்படம் மக்களை மகிழ் வூட்டுவதற்கான சாதனம் அங்கு

இருக்கின்றன. அவற்றின் படி ஒழுகுவதும் அவற்றை அனுசரித்து போவதும் தான் உலக ஒழுங்கு அதனைத் தான் உலகமும் எதிர்பார்க்கின்றது.

திருத்தப்படாத நிலம் களை மண்டிக் கிடக்கும்.

தடுக்கப்படாத வெள்ளம் தாளாது துன்பம் தரும்.

இரண்டு கரைகளுக்குள் அடங்கி ஓடும் ஆறுதான் நாட்டுக்கு நன்மை பயக்கும்.

இறுக்கமாக கட்டப்பட்ட வீணையின் நரம்புகளிலிருந்துதான் இனிமையான இசை பிறக்கும்.

சுய கட்டுப்பாடுதான் நாகரீகத்தின் அடையாளம்.


**ரோமியோ**









# கௌரவம்

விக்ரர்

உனது வேலையைத் தான்
நாங்களும் செய்கிறோம்,
கௌரவமாக...

# இசைக்குயில் சுபாஷினியின்

# "ஸ்ரீராகம்"



**இசைக்கும்** மயங்காத இதயம் உண்டோ என்பார்கள். உள்ளத்தை இசையின் மூலம் செழுமைப்படுத் தலாம். இந்த இசையையே தனது இலக்காகக் கொண்டு அதனை ஒழுங்காகக் கற்றுக் கொண்டிருக் கிறார் திருமதி சுபாஷினி ஸ்ரீகரன்.

யாழ்ப்பாணம் நல்லூர் சட்டநாதர் சிவன் கோவிலடியை பிறப்பிட மாகக் கொண்ட இவர் இசையை யாசிக்கும் குடும்பத்தில் பிறந்த வர்.

இசையை வளர்க்கவும் பரப்பவும் இவர் இசை வகுப்புகளை அழகுற நடத்திக் கொண்டிருக்கிறார். கர் நாடக இசையை சகல உள்ளங்களி லும் உறையச் செய்ய வேண்டும் எனும் பேரவாவில் "ஸ்ரீராகம்

என்ற இறுவட்டை வெளியிட்டிருக் கிறார்

இதில் 5 தமிழ் பாடல்களும் 8 சாஸ் திரீய சங்கீதப் பாடல்களும் 30 பாரதியார் பாடல்களும் ஈழத்தில் தலை சிறந்த ஸாகித்யன் அமரர் வீரமணி ஐயருடைய கல்யாண வசந்த எனும் பொன்னாலை வெங்க டேச வரதராஜப் பெருமாள் பாடல் களும், பேயாழ்வார் பாசுரங்களும் என
இசை, தமிழ், சமயம் என கலந்தது தான் ஸ்ரீராகம் இறுவட்டு.

நான் ஒரு வளர்ந்து வரும் கர் நாடக இசைப் பாடகியே என பெருமையில்லாமல் கூற கின்ற சுபாஷினி 7 வயது முதல் கர்நாடக இசையை கற்று வரு கின்றார்.

கர்நாடக இசையை அனைத்து உள்ள ங்களிலும் பதியச் செய்ய பாடு படப் போவதாக கூறும் இந்த இசைக் குயில் இன்னும் வளர வாழ்த்து வோம்.

"இசை கேட்டால் புவி அசைந்தாடும் அது
இறைவன் அருளாகும்
ஏழாம் கடலும் வானும் நிலவும்
என்னுடன் விளையாடும் - இசை
என்னிடம் உருவாகும்"

கண்ணதாசன்.






ஜெயப்பிரகாஷ்

# நேர்காணல்

(கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திரு தயாபரனுடன் ஒரு சந்திப்பு)



**" புட்டிக்குள் பூட்டி வைத்த பூதம் போலானது எங்களுடைய உள்ளூராட்சி மன்றங்கள். சக்தி வாய்ந்தன, ஆனால் அடைத்து வைத்திருக்கிறார்கள்.. "**

கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திரு தயாபரன்


சமீபத்தில் நடந்து முடிந்த மட்டக்களப்பு மாவட்ட உள்ளூராட்சி மன்றங்களின் தேர்தல்களினாலும், பின்பு மாகாண சபைத் தேர்தல்களினாலும் நாட்டின் அரசியல் தலைவர்களின் கவனம் முபவ தும் கிழக்கு மாகாண அபிவிருத்தியிலும் உள்ளூராட்சி மூலமான ஜனநாயகத்தைப் பற்றியதுமாக இருக்கின்றது. இந்த சந்தர்ப்பத்தில் அங்குள்ள உள்ளூராட்சி மன்றங்களின் நிலைமை என்ன என்று அறிவதற்காக கிழக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திரு. தயாபரனைச் சந்தித்தோம். அவர் உள்ளூராட்சி மன்றங்களின் சிறப்புத் தகைமைகளைப் பற்றிக் கூறுவதுடன் தனது கருத்துக்களை எம்முடன் பகிர்ந்து கொண்டார்.

தயாபரன் - எமது மக்களின் அபிவிருத்திக்குத் தலைமை தாங்கக்கூடிய ஒரு நிறுவனம் எங்களது உள்ளூராட்சி மன்றங்களாகும். பிரதேச செயலாளர் பிரிவுகளில் மாதாந்தம் நடைபெறும் பிரதேச அபிவிருத்தி இணைப்புக் கூட்டங்களில் தலைமை தாங்க வேண்டியவர் யார்? அந்தப் பிரதேச உள்ளூராட்சி மன்றத்தின் தலைவர். அவர் மக்களின் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதியாக இருக்கிறதினாலே அவர் தான் தலைமை தாங்க வேண்டும். ஆனால் அப்படி நடக்கிறதா? அவ்வந்தப் பிரதேச செயலாளரே கூட்டத்தின் காரிய தரிசியாக செயற்படுகிறார். சட்டப்படி பிரதேச செயலாளர் அந்தந்த உள்ளூராட்சி மன்றத்தின் தலைவரின் தலைமையின் கீழ் தான் டிஎஸ் கூட்டம் நடத்த வேண்டும் என்று இருக்கிறது. என்ஜிஒக்கள் அபிவிருத்தித் திட்டங்களுடன் வருகின்றன. உள்ளூராட்சி மன்றங்களிடம் அனுமதி எடுக்கின்றனவா? இல்லை. நியாப் நெக்கோர்ட் போன்ற திட்டங்களை செயற்படுத்தும் நிறுவனங்கள் எங்களுடன் கலந்தாலோசிக்காமல் செயற்பட்டுக் கொண்டிருக்கின்றன. சுற்றுநிருபம் இருக்கின்றன. நடைமுறையில் இல்லையே. நாங்கள் எங்களுடைய உரிமைகளை விட்டுக் கொடுத்துக் கொண்டிருக்கிறோம். ஐரோப்பாவில் எல்லாம் உள்ளூராட்சி

மன்றங்கள் எவ்வளவு அதிகாரங்களு டன் இயங்குகின்றன. அப்படி நாங்கள் வரவேண்டும்.

கேள்வி - ஏன் உள்ளூராட்சி மன்றங்களுக்கு இவ்வளவு அதிகாரங் கள் வழங்கப்படவேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? அதனால் என்ன நன்மை?

தயாபரன் - ஒரு அரசாங்க அலுவலர் தனது திட்டத்துக்கான பணத்தை தான் ஈட்ட முடியாது. ஒரு சின்ன திட்டத்தைச் செயற்படுத்த வேண்டுமென்றாலும் தனது நிறுவனத்திடமிருந்து அனுமதி பெற வேண்டும். ஆனால் உள்ளூராட்சி மன்றங்கள் மக்களால் மக்களுக்காக இயங்குகின்ற அமைப்புக்கள். அவற்றிற்கு வரி போன்றவை மூலம் வருமானம் பெறும் வாய்ப்பும் இருக்கு. அதை வைத்து நல்ல அபிவிருத்தித் திட்டங்களை தீர்மானம் எடுத்துச் செய்யக்கூடிய வாய்ப்பும் இருக்கு. அவை ஒவ்வொன்றும் ஒரு குட்டி அரசாங்கம். ஒரு அரச அதிபர் ஒரு திட்டத்தை மாவட்டத் துக்குக் கொண்டு வருகிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். அந்தத் திட்டம் கேட்ட கேள்வியில்லாமல் மாவட்டம் எல்லாம் செயற்படுத்தப்படும். ஒவ்வொரு டிஎஸ் ஸும் அது தேவையோ தேவையில் லையோ அதை அப்படியே அமுல் படுத்துவார். ஆனால் உள்ளூராட்சி மன்றங்களில் அது நடக்காது. ஒரு பிர தேசத்தில் வாழுகின்ற மக்கள் தான் அங்கே பிரதிநிதிகளாக இருக்கிறாங்க. அவங்க ஏன் என்று கேள்விகளை எழுப் புவாங்க. ஒரு டென்டர் கூப்பிடும் போது அரச அலுவலகங்களில் என்ன நடக்கி றது? ஒரு தீர்மானம் எடுப்பாங்க அதை நிறைவேற்றுவாங்க. டென்டரைப் பற் றியோ கமிஷனைப் பற்றியோ ஒரு கேள் வியில்லை. ஆனால் ஒரு உள்ளூராட்சி மன்றத்தில் எத்தனை பேர் அதைக் கேள்வி கேட்பாங்க தெரியுமா? ஒரு பிர தேச மக்களுக்கு உண்மையாகத் தேவைபடுகின்றதிட்டங்களைச் செய்யும் அணுகுமுறைகளும் வசதிகளும் உள்ளூராட்சி மன்றங்களுக்குத்தான் உண்டு. ஆனால் அதை வாழ விடுகிறார்களில்லையே.



கேள்வி - யாரைக் குறித்து ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்?

தயாபரன் மக்கள் கேள்விகள் கேட்பது ஒருவருக்கும் பிடிப்பதில்லை. நினைத்ததைச் செய்து கொண்டு போக இயலாதே. அதனால் இவற்றைச் செயலிழக்க வைப்பதில் ஒரு நலன் இருக்கிறது. அரச பேரூந்துகள், தனியார் வாகனங்கள் எங்களுக்கு வரி செலுத்த வேண்டும். வரி முறையை ஒழுங்காகச் செய்தால்தானே உள்ளூராட்சி மன்றங்கள் தங்களது அபிவிருத்தித் திட்டங்களை சரியாக

மேற்கொள்ள முடியும்? சகல அபிவிருத்தித் திட்டங்களினையும் மத்திய அரசாங்கம் தன் மூலமாகத்தான் கொண்டுவர நினைக்கின்றது. இன்று மக்களுக்கு சரியான அபிவிருத்தி சென்றடையாததற்கு காரணம் நாங்களல்ல மத்திய அரசாங்கமே. புட்டிக்குள் பூட்டி வைத்த பூதம் போன்ற சக்தி வாய்ந்த ஒரு அமைப்பு அடைக்கப்பட்டு இருக்கிறது. ஒரு உதாரணம் சொல்லுவேன். ஒரு டிஎஸ்ஸுக்கு இரண்டு டிரக்டர் ஒரு திட்டத்தின் கீழ் கிடைத்திருந்தது. அதில் ஒன்றை அவர் அந்தப் பிரதேச உள்ளூராட்சி மன்றத்திற்குக் கொண்டு வந்து தந்தார். நான் கேட்டேன், டிரக்டர் கிடைக்கலாம்? நீங்கள் கொண்டு வந்து தருவது சரி. ஆனால் முதலில் உங்களுக்கு அது கொடுத்திருக்கப்படாதே? இப்படித்தான் விசயங்கள் நடக்கின்றன.

கேள்வி - இதற்கு என்ன செய்யலாம்?

தயாபரன் - உள்ளூராட்சி மன்றங்களின் பொறுப்புக்கள் என்ன? அதிகாரங்கள் என்ன? யார் என்ன செய்ய வேண்டும் என்பது தொடர்பாக அரச அதிபர் தொடங்கி சமுர்த்தி உத்தி யோகத்தர்கள், திணைக்கள அலுவலர்கள், பிரதேச செயலாளர்கள் எல்லோரும் வரை உரிய விளக்கங்களுடனான விழிப்புணர்வு அளிக்கப்படவேண்டும். உள்ளூராட்சி அமைச்சு உள்ளூராட்சி மன்றங்களுக்கூடாகவே சகல அபிவிருத்தித் திட்டங்களையும் செயற்படுத்த வேண்டும். மக்கள் பங்களிப்புடன் அதைச் செய்ய வேண்டும் என்று விரும்புகிறது. உள்ளூராட்சி மன்றங்கள் மக்கள் பங்களிப்புடன் திட்டங்கள் செயற்படுத்துவதற்குப் பொருத்தமான அமைப்புக்களும் கூட மாகாண சபையின் ஒத்துழைப்பும் எங்களுக்கு நிறையத் தேவை. உள்ளூராட்சி மன்றங்கள் 1987 காலப்பகுதியில் ஏற்படுத்தப்பட்ட சட்டங்களுடன் தான் இயங்கி வருகின்றன. பொருத்தமான இடங்களில் இவையும் மாற்றப்பட வேண்டும்.



கேள்வி - இப்பொழுது கிழக்கு அபிவிருத்தியைப் பற்றி அரசாங்கம் கவனம் கொண்டுள்ளது. இதனால் புதிய வாய்ப்புக்கள் உள்ளூராட்சி மன்றங்களுக்கு ஏற்பட்டிருக்கின்றனவா?

தயாபரன் - எங்களுக்கு ஒரு கிழக்கு மாகாணசபை தெரிவாகியிருக்கிறது. எங்களது ஊ.ஆ கிழக்கு மாகாணத்தின் உள்ளூராட்சி அமைச்சராகவும் இருக்கிறார். இது ஒரு நல்ல வாய்ப்புத்தான். பொருளாதார அபிவிருத்திக்கான பல திட் டங்களை நாங்கள் முன்னெடுக்கலாம். ஆசிய அபிவிருத்தி வங்கி, உலக வங்கி என்பனவற்றின் பிரதிநிதிகள் கிழக்கு மாகாண அபிவிருத்தி சம்பந்தமாக முதலமைச்சருடன் கதைத்து வருகிறார்கள். அபிவிருத்திக்குப் பக்கத் துணையாக உள்ளூராட்சி மன்றங்கள் இருக்க வேண்டுமென்றால் எங்களுக்குத்தான் முழுக் கடப்பாடும் உண்டு.

எட்டு வருடங்களாக இது சம்பந்தமாக நான் வாதிடுகிறேன். இவற்றின் பெறுமதி உணர்ந்து நிதி நிறுவனங்கள் இணைந்து பணியாற்ற முன்வர வேண்டும். மக்கள் அமைப்புக்களாக அவை இருப்பதனால் அவை இயங்குவதற்குரிய வருமானத்தை மக்களே கொடுக்க வேண்டும். எனவே மக்கள் தங்கள் வரிகளை ஒழுங்காக செலுத்த வேண்டும். ஐரோப்பிய நாடுகளில் 40 வீதம் வரி கட்டுகிறார்கள் தெரியுமா? இங்கு நாலு வீதமாவது நாம் கொடுக்கிறோமா?

கேள்வி - ஆனால் இதைச் செய்வதில் பிரச்சினைகளும் இருக்கின்றனவே. உள்ளூராட்சிப் பிரதிநிதிகளை மக்கள் நம்ப வேண்டுமே. அவர்கள் ஊழல் மலிந்தவர்கள் என்பதனால் வரி கொடுப்பதில் மக்கள் தயங்கலாம் அல்லவா?

தயாபரன் - உண்மை அபிவிருத்தி கிடைத்தால் மக்கள் தாங்களாகவே வந்து சேருவார்கள். இதற்கு நீங்கள் கூறிய காரணத்துடன் வேறு பல காரணங்களும் இணைந்திருக்கின்றன. யுத்த பயங்கரத்தினால் மக்கள் விரும்பி வந்து தேர்தல்களில் பங்கு பற்றும் சூழல் உருவாகவில்லை. வேட்பாளர்களைத் தேடிப் பிடிப்பதே பெரும் பாடாக உள்ளது. அந்தக் காலத்தில் அப்படியல்ல. கிராமத்தில் முன்னோடியாக உழைத்த ஒருவர் தான் இன்னும் அதைச் செய்ய வேண்டும் என்று விரும்பி பிரசாரம் செய்து உள்ளே நுழைகிறார். இப்பொழுது அந்த எண்ண சிந்தனையே இல்லாதவர்கள் தான் உள்ளூராட்சி மன்ற பிரதிநிதிகளாக தெரிவு செய்யப்படுகிறார்கள்.

நாங்கள் பொது மக்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி எவ்வாறு அவர்களின் பங்கு பற்றலை பெற்றுக் கொண்டு அபிவிருத்தியை ஏற்படுத்துவது என்று செயலமர்வுகளை நடத்துகிறோம்.

அதற்கான தலைமைத்துவத்தையும் மக்கள் மத்தியில் வளர்க்க முயற்சி செய்கிறோம். ஆனால் உறுப்பினர்களோ மக்கள் பங்குபற்றுவதற்காக வடிவமைக்கப்படும் உள்ளூராட்சி மன்ற ஆலோசனைக் குழுக்களை இயக்குவதில் ஆர்வம் காட்டுவதில்லை. மக்கள் வந்தால் கேள்வி கேட்டு விடுவார்கள். தங்கள் ஊழல்கள் வெளியில் தெரிந்து விடும் என்று இவர்களுக்கும் பயம்.

நான் கூறுவதென்னவென்றால் உள்ளூராட்சி மன்றங்கள் சிறப்பான செயற்பட்டால் எங்கள் எல்லோருக்கும் தான் நன்மை. இப்பொழுது மட்டக்களப்பில் பல பசு மாடுகள் உள்ளன. அங்குள்ள பாலை விற்று அங்கர் வாங்குகிறோம் நாங்கள். ஏன் பாலைப் பக்கற் பண்ணி விற்க முடியாது?

சந்தையை நிர்மாணிக்கிறதும் அவை தான். புஸ் ஸ்டான்ட் வாகனம் பார்க் செய்வதற்கான இடம் போன்ற பிஸினெஸுக்கு தேவையான முழு வசதிகளையும் செய்து கொடுக்கிறது உள்ளூராட்சி மன்றம். உள்ளூராட்சி மன்றங்கள் சிறப்பாக செயற்பட்டால் இப்படி எத்தனையோ திட்டங்களை யாருக்கும் காத்திராமல் நாங்களே தீர்மானம் எடுத்து செயற்படுத்தலாம். அதனால் இன்றோ உள்ளூராட்சி மன்றங்களின் வருமானங்கள் எல்லாத விதத்தாலும் முடக்கப்பட்டுள்ளது. வரியில்லை. சந்தையில்லை. வியாபார முயற்சியில்லை. ஆனால் கிராம மட்டத்தில் எல்லாவித அபிவிருத்தியையும் முன்னெடுக்கிற தகுதி உள்ளூராட்சி மன்றங்களுக்கு உண்டு....

# இருப்பு



செய்திகள் இங்கு தின்பதற்காகவே!

# இளைஞர்களின் நிகழ்காலம் சமூகத்தின் எதிர்காலம்

**நாளைய சமாதானம்**

இன்றைய இளைஞர் சமுதாயத்தின் கையில் ஒரு முக்கிய பணி உள்ளது. அமைதியான ஒரு நல்ல சூழலை இந்நாட்டில் உருவாக்க ஒவ்வொரு பிரஜையும் உழைக்கவேண்டியுள்ளது. Future Peace என்ற அமைப்பு இந்தப் பணிக்காக இளைஞர்களை ஒன்றுதிரட்டுகிறது. நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வந்து பல்லின மத சமூகங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் ஒரு இளைஞர் கூட்டம் ஒன்றிணைந்து சமாதானம் குறித்த செய்தியினை மக்களிடையே எடுத்துச் செல்ல உழைக்கின்றது. கடந்த வருடம் அநுராதபுரத்தில் கூடிய இவர்கள் பலநாட்கள் அங்கே தங்கியிருந்து மக்களோடு இணைந்து பல செயற்பாடுகளிலும் ஈடுபட்டனர்.





21, Siripa Lane, Colombo 05, Sri Lanka
Phone : +94 (0)11-2555247/8, Fax : +94 (0)11-2555249
Email : flict@sltnet.lk

FLICT

The Pioneer And Leading
Color Separation
in Sri Lanka



**Color Separations, Proofing, Designing**
**Plates-G.T.O, KORD, KORS, SORD**
**CMYK Printouts, Hi - end Drum Scanning**
**YCG Brand - Paper, Boards, Stickers**

YASEEN'S
COLOR SEPARATION

17, Hulftsdort Street, Colombo 12. Sri Lanka. Tel : 4736079 / 0777 770097 Fax : 4795198
e.mail : imis7777@yahoo.com, yaseencolor@wow.lk Web : www.yaseensgraphics.com